# உதயன்

விலை ரூபா 6-00

சுடர்:13 வள்ளுவர் ஆண்டு 2029 புரட்டாதி 29 வியாழக்கிழமை(15-10-1998) UTHAYAN- A Lively National Tamil Daily சுடர்:275


# செம்மணி, மனித உரிமை மீறல்கள்: பிரிட்டிஷ் குழுவினர் இங்கு ஆராய்வு

## மனித உரிமை ஆணைக் குழுவுடன் நேற்று விரிவாகப் பேச்சு நடத்தினர்

யாழ்ப்பாணம், ஒக்ரோபர் 15

குடாநாட்டில் இடம்பெறும் மனித உரிமை மீறல் சம்பவங்கள், செம்மணி மனித புதைகுழி தோண்டும் விவகாரம் ஆகியன தொடர்பாக யாழ். வந்துள்ள பிரிட்டிஷ் தூதரக அதிகாரிகள் மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ். அலுவலக அதிகாரிகளுடன் நேற்று மாலை விரிவாக ஆராய்ந்தனர்.

யாழ். மாவட்டத்துக்கு மூன்று நாள் விஜயம் மேற்கொண்டு வந்துள்ள பிரிட்டிஷ் அதிகாரிகள் நேற்று யாழ். நகரில் பல பகுதிகளுக்கும் சென்று மக்களின் இயல்பு நிலை, அவர்களின் தேவைகள் குறித்து விவரங்களைப் பெற்றனர்.

யாழ். நகரில் இயங்கும் சர்வதேச தொண்டர் நிறுவனங்களின் பிரதிநிதிகளுடனும் அவர்கள் கலந்துரையாடினர்.

மூவர் அடங்கிய பிரிட்டிஷ் குழுவினர் நேற்று மாலை மனித உரிமைகள் ஆணைக்குழு பிரதிநிதிகளுடனும் கலந்துரையாடினர்.

அப்பொழுதே செம்மணி

(12 ஆம் பக்கம் பார்க்க)

## பயண வசதி இன்றி 68 பல்கலை. மாணவர்கள்

### பரீட்சையை தவறவிடும் நிலை

யாழ்ப்பாணம், ஒக். 15

வெளிமாவட்டங்களில் உள்ள பல்கலைக்கழகங்களில் பயிலும் 68 மாணவர்கள் போக்குவரத்து வசதியின்றி யாழ்ப்பாணத்தில் தங்கி உள்ளனர்.

விடுமுறையில் வந்த இந்த மாணவர்கள் போக்குவரத்து வசதி பெறுவதற்காக பல இடங்களுக்கு திரிந்தும் பயன் கிடைக்கவில்லை என்று கூறப்படுகிறது.

எதிர்வரும் திங்கட்கிழமை தமக்கு வருடாந்த பரீட்சை ஆரம்பமாவதாகவும் —

அந்தப் பரீட்சைக்குத் தோற்றமுடியாது போனால் மேலும் ஒருவருடம் காத்திருக்க வேண்டிய நிலை உள்ளது என்றும் — பேராதனைப் பல்கலைக்கழக பொறியியல் பீடத்தைச் சேர்ந்த மாணவர்கள் தெரிவித்தனர்.

இவர்களில் 39 மாணவர்கள் இங்கு தங்கிஉள்ளனர்.

இவர்களுடன் சப்பிரகமுவ பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த 8 பேரும் —

(12 ஆம் பக்கம் பார்க்க)

## தமிழர்கண்டபடி கைதாவதை தடுப்பதற்கு நடவடிக்கை

### பொலீஸ் நிலையத்தில் கணனி நிலையங்கள்

கொழும்பு, ஒக். 15

கொழும்பில் தமிழர்கள் கண்டபடி கைது செய்யப்படுவதைத் தடுக்கும் நோக்குடன் கொழும்பிலுள்ள மூன்று பொலீஸ் நிலையங்களில் கணனி தரவு நிலையங்கள் அமைக்கப்பட உள்ளன.

வெள்ளவத்தை, மருதானை, கொட்டாஞ்சேனை ஆகிய இடங்களிலுள்ள பொலீஸ் நிலையங்களிலேயே இந்தக் கணனி தரவு நிலையங்களை அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இதேவேளை பொலீஸ் நிலையங்களில் தமிழில் முறைப்பாடு செய்வதற்கு வசதியாக தமிழ் தெரிந்த பொலீஸாரை நியமிப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்—

தமிழ்ப் பொலீஸாரை நியமிக்கும் பணியைதற்பொழுது பாதுகாப்பு அமைச்சு துரிதப்படுத்தி வருகின்றது என்றும் தெரிவிக்கப் படுகின்றது.

(இ-6)

## உயிராபத்து குறித்து உதவி கோரப்பட்டதா?

### செய்திக்கு ஈ.பி.டி.பி. மறுப்பு

யாழ்ப்பாணம், ஒக். 15

யாழ். உள்ளூராட்சிச் சபைத் தலைவர்கள், உறுப்பினர்கள் எதிர்நோக்கும் உயிராபத்துக் குறித்து உலக நாடுகளிடம் உள்ளூராட்சித் தலைவர்களும், உறுப்பினர்களும் கோரிக்கை விடுத்துள்ளனர் என்று வெளிவந்துள்ள செய்திக்கும் தமது அமைப்புக்கும் எந்தவித தொடர்பும் இல்லை என்று ஈ. பி. டி. பி. தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக ஈ. பி. டி. பி. யாழ். அலுவலகம் விடுத்துள்ள செய்திக் குறிப்பிலேயே இப்படித் தெரிவிக்கப்பட்டுள்ளது.

"10 பிரதேச சபைத் தலைவர்களையும், 105 உறுப்பினர்களையும் கொண்டிருக்கும் எமது கட்சி இப்படி எந்தவித கோரிக்கையையும் உலக நாடுகளின் தூதுவர்களிடம் விடவில்லை. இந்தக் கோரிக்கைக்கும் எமக்கும் எந்தவித தொடர்பும் இல்லை" என்று அந்தச் செய்திக் குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(இ-3)

## வன்னிப் போக்குவரத்து நேற்று முதல் ஸ்தம்பிதம்

வவுனியா, ஒக். 15

இராணுவக் கட்டுப்பாடற்ற வன்னிக்கும் ஏனைய இடங்களுக்குமான போக்குவரத்து முற்றாக நிறுத்தப்பட்டுள்ளது.

இராணுவக்கட்டுப் பாடற்ற பகுதிகளில் இருந்து உயிலங்குளம் தடைமுகாம் ஊடாக இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிக்கு செல்வதற்கு ஏற்கனவே தடை விதிக்கப்பட்டிருந்தது.

இராணுவக் கட்டுப்பாட்டு பகுதிகளில் இருந்து இராணுவக் கட்டுபபாடற்ற வன்னிக்கு செல்வதற்கான போககுவரத்து நேற்று முதல் தடைசெய்யப்பட்டுள்ளது.

இராணுவக் கட்டுப்பாடற்ற வன்னிப்பகுதியில் வாந்திபேதி பரவுவதையடுத்தே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

(இ-3)

## மாங்குளம் பகுதியில் மோதல்

கொழும்பு, ஒக். 15

மாங்குளத்துக்கு வடமேற்குப் பகுதியில் நேற்று முன்தினம் இராணுவத்துக்கும், விடுதலைப் புலிகளுக்கும் இடையில் மோதல் இடம் பெற்றது.

இந்த மோதலில் 6 விடுதலைப் புலி உறுப்பினர்கள் உயிரிழந்ததாகப் பாதுகாப்பு அமைச்சின் நடவடிக்கைத் தலைமையகம் தெரிவித்தது.

(இ-6)

## பம்பாய் அழகி கொலை: நால்வர் விளக்க மறியலில்

யாழ்ப்பாணம், ஒக். 15

கடந்த ஞாயிற்றுக்கிழமை முகத்துவாரம் காக்கைதீவுப் பகுதியில் கடத்தப்பட்டு வல்லுறவின் பின் கொல்லப்பட்ட தமிழ் பொறியியலாளர் ஒருவரின் மனைவியின் மரணம் தொடர்பாகக் கைது செய்யப்பட்டுள்ள நால்வரையும் எதிர்வரும் 27 ஆம் திகதி வரைக்கும் விளக்கமறியலில் வைக்குமாறு கோட்டை நீதிவான் உத்தரவிட்டுள்ளார்.

ஏற்கனவே கைது செய்யப்பட்டவர்களுடன் மஹியங்கனையில் வைத்து நேற்றுக் கைது செய்யப்பட்ட நபரும் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டிருந்தார்.

இதே வேளை—

இந்தக் கொலை தொடர்பாக மகளிர் விவகார அமைச்சர் ஹேமா ரதினாயக்க கவலை தெரிவித்துள்ளதுடன் பெண்களுக்கு எதிரான குற்றச் செயல் மற்றும் வன்செயல் என்பனவற்றை தடுக்க அரசு சகல நடவடிக்கைகளையும் எடுக்கும் என்றும் தெரிவித்தார்.

## இராணுவக் கட்டுப்பாடற்ற பகுதிகளில் வாந்திபேதி தீவிரமாகப் பரவுகிறது

### முன்னேற்பாட்டு நடவடிக்கை துரிதம்

வவுனியா, ஒக். 15

இராணுவக்கட்டுப்பாடற்ற வன்னியில் விடத்தல் தீவு, பள்ளமடு பகுதிகளில் வாந்திபேதி நோய் தீவிரமாகப் பரவுவதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

இதுவரை ஐந்து பேர் அப்பகுதியில் உயிரிழந்தனர்; 167 பேர் வாந்திபேதி நோயினால் பீடிக்கப்பட்டுள்ளனர் என இனங்காணப்பட்டுள்ளது.

அப்பகுதிகளில் உள்ள உணவு சாலைகள் மூடப்பட்டுள்ளன; பாடசாலைகளும் இயங்கவில்லை.

அப்பகுதிகளில் இருந்து மக்கள் வெளியிடங்களுக்குச் செல்வது தடை செய்யப்பட்டுள்ளது.

நோய்த் தடுப்புப் பணி தீவிரமாக்கப்பட்டுள்ளது.

அதேநேரம் — வவுனியாவில் இருந்து மருந்து வகைகள் இன்று அங்கு எடுத்துச் செல்லப்படவிருக்கின்றன.

(இ-3)

## கல்வி நிர்வாக சேவை பரீட்சையில் 24 பேர் சித்தி

### நேர்முகப் பரீட்சை 31 இல்

கொழும்பு, ஒக். 15

1995 ஆம் ஆண்டு நடத்தப்பட்ட இலங்கைக் கல்வி நிர்வாக சேவையின் 3 ஆம் வகுப்புக்கு ஆள் சேர்ப்பதற்காக நடத்தப்பட்ட மட்டுப்படுத்தப்பட்ட பரீட்சையிலிருந்து நியமனம் வழங்குவதற்கான தகைமைகளைப் பரிசீலனை செய்வதற்கு யாழ். மாவட்டத்தில் இருந்து 24 பேர் அழைக்கப்பட்டுள்ளனர்.

அவர்களின் விவரம் வரு

(12 ஆம் பக்கம் பார்க்க)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்த்துகின்றோம்

ஈழத்தின் சிற்பக் கலையில்
தனக்கென
தனித்துவமான முத்திரையைப் பதித்தவரும்
'கலாபூஷணம்'
விருதைப் பெற்றவருமான

## ஆறுமுகம் ஜீவரட்ணம்

அவர்கள்

11-10-98இல் யாழ். இந்து சமயப் பேரவையால் 'தேவசிற்ப கற்பகம்' விருது வழங்கப்பட்டு கௌரவிக்கப்பட்டமையைப் பாராட்டுவதுடன்,

தேவசிற்ப கற்பகம் ஆறுமுகம் ஜீவரட்ணம்

அவர்கள் தனது கலைச் சேவையை உலகிற்குத் தொடர்ந்தும் வழங்க அருள்புரிய வேண்டுமென எல்லாம் வல்ல தலங்காவல் விநாயகரை வேண்டுகின்றோம்.

தலங்காவல் விநாயகர் அடியார்கள் சார்பில்
திருநெல்வேலி கிழக்கு. எஸ். சேய்மானந்தன்

(59961)

# இலங்கை
# செஞ்சிலுவைச் சங்கம்
## சாவகச்சேரி பிரிவு நடத்தும்
## இலவச மருத்துவ பரிசோதனையும்
## வைத்திய ஆலோசனையும்

இடம்: பிரிவுக் காரியாலயம்
மில் வீதி, மீசாலை கிழக்கு.

காலம்: 18 - 10 - 98 ஞாயிற்றுக்கிழமை
காலை 8 மணி தொடக்கம்.

1) இரத்த அமுக்கம்
2) சல ரோகம்
3) வாய்ப் புற்று நோய்
4) சிறுவர்களுக்கு - பல், போசாக்கின்மை
5) மார்புப் புற்று நோய்
6) கண்

கௌரவ செயலாளர்.

(59955)

# மரண அறிவித்தல்கள்

## இரத்தினம் செல்வநிதி

(பழைய மாணவி, யா/வேம்படி மகளிர் உயர்தர கல்லூரி)

இராஜவீதி கோப்பாய் மத்தியை நிரந்தர வசிப்பிடமாகக் கொண்ட கந்தையா இரத்தினம் செல்வநிதி நேற்று 14. 10. 98 இல் அகால மரணமானார்.

இவர் இரத்தினம் ரதீனாபதி தம்பதிகளின் புதல்வியும் சியாமளா, செந்தில் வர்ணன், நர்கிலா (யாழ். இந்து மகளிர் கல்லூரி), கஜேந்திரன் (கோப்பாய் சரவணபவானந்த வித்தியாலயம்) ஆகியோரின் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (15. 10. 98) வியாழக்கிழமை நண்பகல் 12 மணியளவில் நடைபெறும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள், சகமாணவர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
கந்தையா இரத்தினம்
(தந்தை)

இராஜவீதி,
கோப்பாய் மத்தி.

(59958)

## வேலுப்பிள்ளை சபாரெத்தினம்

(சபா அண்ணை)

யாழ். கண்டுக்குளி கொய்யாத் தோட்டத்தைப் பிறப்பிடமாகவும், வதிவிடமாகவும் கொண்ட வேலுப்பிள்ளை சபாரெத்தினம் கொழும்பு வெள்ளவத்தையில் காலமானார்.

அன்னார் வேலுப்பிள்ளை வள்ளியம்மையின் அருமை மகனும், வேலுப்பிள்ளை ஆச்சிக்குட்டியின் அருமை மருமகனும், காலஞ்சென்ற இராசமணியின் (றோஸ்), அன்புக் கணவரும், இந்திராணி (கொழும்பு), தயாமணி (கொழும்பு), காலஞ்சென்ற தவராஜா, அன்னராணி (பாவைசபான்-யாழ்/மாநகர சபை), காலஞ்சென்ற புஸ்பராணி, புஸ்பராஜா (கொழும்பு), நந்தகுமார் (கனடா), யோகராணி (கனடா) ஆகியோரின் அன்புத் தந்தையும், காலஞ்சென்ற பேரம்பலம், சிதம்பரநாதன் (கொழும்பு), ஜெகதீஸ்வரராஜா, புஸ்பலதா (கொழும்பு), ஜானகி (கனடா), சந்திரராஜன் (கனடா) ஆகியோரின் அன்பு மாமனாரும் காலஞ்சென்ற குமரையா (மலேசியா), காலஞ்சென்ற பாக்கியம், நவநீதி (சிங்கப்பூர்) ஆகியோரின் அன்புச் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் வெள்ளவத்தை, இல. 12, மல்லிகா லேனில் உள்ள அன்னாரின் இல்லத்தில் இன்று (15 - 10 - 98) வைக்கப்பட்டு அதன்பின் நாளை (16-10 98) பொறளை மலர்ச்சாலையில் வைக்கப்பட்டு பின் கனத்தை மயானத்தில் இறுதிக்கிரியைகள் நடைபெறும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றேன்.

தகவல்:
ஜெ. அன்னராணி
(மகள்)

9/6, புது வீதி,
கொய்யாத்தோட்டம், யாழ்ப்பாணம்.

(59956)

# பரிசளிப்பு விழா

கொழும்புத்துறை, ஒக். 15

கொக்குவில் இந்துக் கல்லூரியின் வருடாந்த பரிசளிப்பு விழா இன்று வியாழக்கிழமை காலை 9.30 மணிக்கு கல்லூரி மண்டபத்தில் அதிபர் பொ. கமலநாதன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் யாழ். மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் து. வைத்திலிங்கம் பிரதம விருந்தினராகவும், யாழ். பல்கலைக்கழகம் கல்வியியற்றுறை சிரேஷ்ட விரிவுரையாளர் மா. சின்னத்தம்பி கௌரவ விருந்தினராகவும் கலந்து கொள்வர்.

திருமதி ஜெ. வைத்திலிங்கம் பரிசில்களை வழங்கிக் கௌரவிப்பார். (ஐ-4-30)

★ ★ ★

வடமராட்சி, ஒக். 15

வல்வெட்டித்துறை மகளிர் வித்தியாலய பெற்றோர் தின விழாவும், பரிசளிப்பு விழாவும் நாளை மறுதினம் சனிக்கிழமை அதிபர் திருமதி நகுனாம்பிகை குணேந்திரராசா தலைமையில் நடைபெறவுள்ளன. இவ்விழாவில் யாழ். கல்வி வலயம் இரண்டின் கல்விப்பணிப்பாளர் திரு. வி. இராசையா பிரதம விருந்தினராகவும், பருத்தித்துறை கல்விக்கோட்ட பிரதிக் கல்விப்பணிப்பாளர் வி. எஸ். செல்வரத்தினம் சிறப்பு விருந்தினராகவும் கலந்துகொள்வர்.

[ஐ-173]

★ ★ ★

யாழ்ப்பாணம், ஒக். 15

நாவற்குழி மகாவித்தியாலய பரிசில் நாள் இன்று வியாழக்கிழமை நடைபெறவுள்ளது.

யாழ். கல்வி வலயம் ஐந்தின் கல்விப்பணிப்பாளர் வ. செல்வராசா பிரதம விருந்தினராகவும், தென்மராட்சி கல்விக்கோட்டக்கல்வி அதிகாரி இ. கணேசன், சாவகச்சேரி பங்குத்தந்தை வண. பிதா நேசநாயகம் அடிகள் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகவும் கலந்து கொள்வர். (ஐ-173)

# ஒருங்கிணைப்புக் கூட்டம்

வலிகாமம் தெற்கு, ஒக். 15

வலிகாமம் தெற்கு பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட திணைக்களங்களுக்கிடையிலான ஒருங்கிணைப்புக் கூட்டம் இன்று வியாழக்கிழமை காலை 10 மணிக்கு பிரதேச செயலகத்தில் நடைபெற உள்ளது.

இக்கூட்டத்துக்கு சகல திணைக்களங்களையும் சேர்ந்த பிரதிநிதிகளையும் தவறாது சமுகமளிக்குமாறு பிரதேச செயலர் ஆ. மகாலிங்கம் அறிவித்துள்ளார். (ஐ-152)

## ராஜா டாக்கீஸ்

யாழ்ப்பாணம்.
இரண்டாவது
வெற்றி வாரமாக
அரவிந்தசாமி
மதுபாலா ஸ்ரீவித்தியா
ஜனகராஜ் நாஸர்
நடித்த

## ரோஜா

இனிய பாடல்கள்
நிறைந்தது
10-30, 2-00, 5-00
(புதிய நேரம்)

(சி/5176)

## நாகம்ஸ் சினிமா

சுன்னாகம்
18-10-98 வரை
மம்முட்டி - அஞ்சு
சத்திரிய வம்சம்
(நீலம்)
நெஞ்சை உருக்கும் காட்சிகள்
காட்சி: 10-30, 2-30

(59959)

## LIONS CLUB OF NALLUR 10th YEAR

## நல்லூர் லயன்ஸ் கழகம்

10 ஆவது ஆண்டு

MONTHLY PROJECT மாதாந்த செயற்றிட்டம்

இலவச கண் பரிசோதனையும்
நீரிழிவு பரிசோதனையும்
மருத்துவ பரிசோதனையும்
இலவச மருந்து கண்ணாடி வழங்கலும்

காலம்:- 18.10.98 ஞாயிறு
காலை 9.00 மணி.

இடம்:- பகவான் ஸ்ரீ சத்ய சாயி சேவா
சமித்தி நிலையம்
இராமநாதன் வீதி, திருநெல்வேலி

கழக மருத்துவக் குழுத் தலைவர்
லயன் டாக்டர்
ஜி. பிரதீப் குமார் தலைமையில்

மருத்துவக் கல்லூரி மாணவர்கள் பங்கு கொள்ளும் மருத்துவ முகாமில் பங்குகொள்ள விரும்புவோர் தங்கள் பெயர்களை

★ பகவான் ஸ்ரீ சத்யசாயி சேவா
சமித்தி நிலையத்திலும்

★ லயன் நா. இராசநாயகம்
உலக தொலை தொடர்பு நிலையம்
140, இராமநாதன் வீதியிலும்
பதிவுசெய்து கொள்ளவும்.

குறிப்பு: இலவச மூக்குக் கண்ணாடி வறுமைக் கோட்டின் கீழ் வாழ்வோருக்கு முன்னுரிமை அடிப்படையில் வழங்கப்படவுள்ளதால் கிராம சேவையாளர் அத்தாட்சிப்பத்திரத்துடன் சமுகமளிக்கவும்.

தலைவர்
லயன் பா. தவபாலன்
லயன்ஸ் கழகம் நல்லூர்.

விளம்பர உதவி
லயன் நா. இராசநாயகம்

## உலக தொலை தொடர்பு நிலையம்

இல. 140, இராமநாதன் வீதி,
திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.

(சி/5205)

# மரண அறிவித்தல்

திருமதி

## சாந்தநாயகி இராசையா

(தங்கம்)

சரசாலையைப் பிறப்பிடமாகவும், அம்பலவாணர் வீதி, அத்தியடியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சாந்தநாயகி அவர்கள் 14 - 10 - 1998 அன்று யாழ்ப்பாணத்தில் காலமானார்.

அன்னார் அமரத்துவமடைந்த சித்த வைத்திய கலாநிதி சங்கரப்பிள்ளை இராசையா (முன்னாள் அதிபர், சரசாலை ஸ்ரீ கணேச வித்தியாலயம்) அவர்களின் பிரிய பத்தினியும், திரு. குமாரசாமிப்பிள்ளை (கணக்காளர், ஆஸ்திரேலியா), திருமதி லோகநாயகி ஸ்ரீசக்திவேல் (முகவர், இலங்கைக் காப்புறுதிக் கூட்டுத்தாபனம்), திருமதி டாக்டர் தேவநாயகி தில்லைநடராஜன் (ஆஸ்திரேலியா) அவர்களின் பாசமிகு தாயாரும், திருமதி யோகம்மா சரவணமுத்து அவர்களின் அன்புச் சிற்றன்னையும், திருமதி தனலட்சுமி குமாரசாமிப்பிள்ளை (ஆஸ்திரேலியா), திரு. வி. ஸ்ரீசக்திவேல் (முன்னாள் யாழ். கல்விக் கோட்ட திட்டமிடல் அதிகாரி), திரு. சோ. தில்லைநடராஜன் (கணக்காளர், ஆஸ்திரேலியா), அவர்களின் அன்பு மாமியாரும், திரு. கைலைநாதன், திருமதி ஈஸ்வரி, திரு. கு. அருள்குமரன் (பொறியியலாளர், ஆஸ்திரேலியா), திரு. கு. ஆனந்தகுமரன் (பல்கலைக்கழகம், ஆஸ்திரேலியா), திரு. ஸ்ரீசிவகுமரன் (சென்னைப் பல்கலைக்கழகம்), செல்வி ச. ஸ்ரீசிவசக்தி (சென்னைப் பல்கலைக்கழகம்) ஆகியோரின் அன்புப் பாட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 15-10-1998 வியாழக்கிழமை காலை 10-30 மணியளவில் இல. 45, அம்பலவாணர் வீதி, அத்தியடி யாழ்ப்பாணத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காகக் கோம்பயன் மணல் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் இவ்வறிவித்தலை ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

தகவல்:
திரு. வீ. ஸ்ரீசக்திவேல்
(மருமகன்)

45, அம்பலவாணர் வீதி,
அத்தியடி,
யாழ்ப்பாணம்.

(59941)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செய்திக் கொத்து

### தேவாலயத்துக்கு தொலைபேசி

அரியாலை, ஒக்: 15

பாண்டியந்தாழ்வு சந்தனமாதா தேவாலயத்திற்கு தொலைபேசி இணைப்பு வழங்கப்பட்டுள்ளது. கடந்த திங்கட்கிழமை முதல் இந்த இணைப்பு வழங்கப்பட்டுள்ளது. (ஐ-17)

### பண்ணிசை வகுப்பு

கொழும்புத்துறை, ஒக். 15

யாழ். வண்ணை அருள்மிகு ஸ்ரீ செந்தில்கதிர் வேலாயுத (கதிரேசன்) சுவாமி கோயில் அறநெறிப் பாடசாலை கொழும்பு இந்து கலாசார அமைச்சால் பதிவு செய்யப்பட்டுள்ளது.

இங்கு தேவார இசைமணி தாவடியூர் எஸ். ஆர். திருஞானசம்பந்தனின் பண்ணிசை வகுப்புகள் நாளை வெள்ளிக்கிழமை மாலை 4-00 மணிக்கு கொட்டடி கிராம உத்தியோகத்தரும், அறநெறிப் பாடசாலையின் தலைவருமான ந. லிங்கேஸ்வரன் தலைமையில் ஆரம்பமாகவுள்ளன. (ஐ-30)

### வீதி திருத்தம்

வடமராட்சி, ஒக். 15

பருத்தித்துறை கிராமக் கோட்படிச் சந்தியிலிருந்து மருதங்கேணி வீதியிலுள்ள வராத்துப் பளைச்சந்தி வரை செல்லும் வீதி சுமார் 20 இலட்சம் ரூபா செலவில் திருத்தி புனரமைக்கப்பட்டுள்ளது. (ஐ-173)

### அரிசி மூடையின் அடியில் நாகபாம்பு

அரியாலை, ஒக்: 15

யாழ். பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் கிளை ஒன்றில் சுமார் மூன்றடி நீளமுடைய நாகபாம்பு அரிசி மூடைக்கு அடியில் காணப்பட்டது.

கடந்த திங்கட்கிழமை நிவாரண விநியோகத்தின் போது அரிசி மூடையை தூக்கிய சமயம் நாகபாம்பு இருக்கக் காணப்பட்டது.

இச்சம்பவம் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் பாஷையூர் கிளையில் இடம்பெற்றது. (ஐ-17)

### மண்வெட்டி விநியோகம்

கொழும்புத்துறை, ஒக். 15

தெல்லிப்பழை பிரதேச செயலாளர் பிரிவில் 13ஆம் திகதி செவ்வாய்க்கிழமை தொடக்கம் யாழ். பட்டினிக்கெதிரான நிறுவனத்தால் மண்வெட்டிகள் வழங்கப்பட்டு வருகின்றன.

இப்பகுதியைச் சேர்ந்த மொத்தம் ஆயிரத்து 700 பேருக்கு மண்வெட்டிகள் வழங்கப்படும்.

மண்வெட்டி பெறும் சகலருக்கும் ஐந்து பழமரக் கன்றுகளும் வழங்கப்படும்.

மா, தோடை, எலுமிச்சை, கொய்யா, நாத்துப்பாக்கு ஆகிய பழமரக் கன்றுகளே வழங்கப்படும். (ஐ-30)

# சூடாநாட்டில் டீசல், மண்ணெண்ணெய் போதியளவு கையிருப்பில் உள்ளன

## தட்டுப்பாடு இல்லை என்கிறார் அதிகாரி

யாழ்ப்பாணம், ஒக். 15

டீசல், மண்ணெண்ணெய் உட்பட சகல எரிபொருள்களும் போதியளவு களஞ்சியப்படுத்தப்பட்டிருப்பதாகவும் அவற்றுக்கு தட்டுப்பாடு ஏற்பட எவ்வித காரணமும் இல்லை என்றும் பெற்றோலியக் கூட்டுத்தாபன அதிகாரி ஒருவர் உதயனுக்குத் தெரிவித்தார்.

பெற்றோலியக் கூட்டுத்தாபனக் களஞ்சியத்தில் 4 இலட்சம் லீற்றர் டீசலும், 4 இலட்சம் லீற்றர் மண்ணெண்ணெயும், போதியளவு பெற்றோலும் கையிருப்பில் உள்ளன.

எனவே இவற்றுக்குத் தட்டுப்பாடு ஏற்பட இடமில்லை. தற்போது திருமலையில் இருந்தே எரிபொருள்கள் சூடாநாட்டுக்கு எடுத்து வரப்படுகின்றன. இதனால் உடனுக்குடன் அவற்றை பெற்றுக்கொள்ள முடிகிறது.

சகல எரிபொருள் முகவர் நிலையங்களும் சனி, ஞாயிறு இரு தினங்களும் திறக்கப்பட்டு பொதுமக்களுக்கு எரிபொருள் விநியோகத்தை மேற்கொள்ள வேண்டும் எனப் பணித்துள்ளோம்.

எரிபொருள்களுக்கு தட்டுப்பாடு ஏற்பட்டிருப்பதான வதந்திகளை நம்பி அவற்றைத் தேவைக்கு அதிகமாகக் கொள்வனவு செய்வதன் மூலம் செயற்கைத் தட்டுப்பாட்டையே ஏற்படுத்த முடியும். இதனைத் தடுக்க பொதுமக்கள் ஒத்துழைப்பு வழங்கவேண்டும்— என்றும் அவர் தெரிவித்தார். (ஐ713)

### முச்சக்கரவண்டி அன்பளிப்பு

யாழ்ப்பாணம், ஒக். 15

நல்லூர்ப் பிரதேச செயலக சமூக சேவைப்பகுதியினரின் யுத்த அனர்த்தங்களால் அங்கவீனமான 5 பேருக்கு அண்மையில் முச்சக்கரவண்டிகளை அன்பளிப்பாக வழங்கியது.

அன்பளிப்பாக வழங்கப்பட்ட முச்சக்கரவண்டி ஒவ்வொன்றும் ரூபா 11 ஆயிரம் பெறுமதியானதாகும்.

இதேவேளை செவிப்புலன் அற்ற மற்றும் கண்பார்வையற்ற சுமார் 30 பேருக்கு அண்மையில் அதற்கான உபகரணங்கள் வழங்கப்பட்டதாக மேற்படி பிரதேச செயலக சமூக சேவை உத்தியோகத்தர் தெரிவித்துள்ளார். (ஐ-7)

# 'சீல்' வைத்த இறைச்சியை பார்த்து வாங்கவும்

## மக்களுக்கு அறிவுறுத்தல்

வலிகாமம் தெற்கு, ஒக். 15

இறைச்சி வாங்கும் போது சுகாதாரப் பரிசோதகர்களால் அவை பரீட்சிக்கப்பட்டு உறுதிப்படுத்தப்பட்டவையா என்பதை அவதானித்து வாங்குமாறு தெல்லிப்பழை பொதுச் சுகாதாரப் பரிசோதகர் ந. சச்சிதானந்தன் பொது மக்களை எச்சரித்துள்ளார்.

அண்மையில் சுன்னாகத்தில் உள்ள இறைச்சி வெட்டும் நிலையத்தில் வைரஸ் நோயுடன் காணப்பட்ட மாட்டிறைச்சி கண்டு பிடிக்கப்பட்டு அவை பொதுமக்கள் பாவனைக்கு ஒவ்வாதவையென அழிக்கப்பட்டன.

இச்சம்பவத்தைத் தொடர்ந்து சுகாதாரப் பரிசோதகர் மேற்படி எச்சரிக்கையை விடுத்துள்ளார்.

சுன்னாகம், மல்லாகம், உடுவில், இணுவில், தாவடி போன்ற இடங்களில் சட்டவிரோதமான முறையில் களவாக ஆடு, மாடுகள் வெட்டப்பட்டு விற்பனை செய்யப்படுவதாகவும் தகவல்கள் தெரிவிக்கப்பட்டுள்ளன. பொதுமக்கள் இது குறித்து கவனமாக இருக்க வேண்டுமெனவும் சுகாதாரப் பரிசோதகர் எச்சரித்துள்ளார். (ஐ.152)

### வீதி திருத்தம்

யாழ்ப்பாணம், ஒக். 15

கச்சேரி — நல்லூர் வீதி திருத்தும் வேலைகள் தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

யாழ். செயலகத்தின் தற்போதைய வாயிலுக்கு முன்பாகவுள்ள இந்த வீதி கடந்த 10 வருடங்களுக்கு மேலாக திருத்தம் செய்யப்படாதிருந்தது குறிப்பிடத்தக்கதாகும். (ஐ-7)

# சமய அமைப்புகள் கிராம மட்டத்திலும் செயல் திறனுடன் பணி புரிய வேண்டும்

## இந்து சமயப் பேரவை விழாவில் துணைவேந்தர்

யாழ்ப்பாணம், ஒக்: 15

இந்து சமயம் மேலும் தழைக்கவும், சிறப்புறவும் வேண்டுமாயின் கிராம மட்டத்திலும், மாவட்ட மட்டத்திலும் சமய நிறுவன அமைப்புகள் இறுக்கமான செயற்றிறன் கொண்ட அமைப்புகளாக இருக்க வேண்டும்.

இவ்வாறு யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை யாழ். இந்து சமயப் பேரவையினால் நடத்தப்பட்ட கலைஞர், அறிஞர் கௌரவிப்பு விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றும் போது தெரிவித்தார்.

பேரவையின் தலைவர் அருட்கவி சீ. விநாசித்தம்பி தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் கலைஞர்களும், அறிஞர்களும் ஏனையோருமாகப் பெரும் எண்ணிக்கையில் சமுகமளித்திருந்தனர். விழா ஆரம்பமாவதற்கு முன் நல்லூர்ச் சிவன் கோயிலில் விசேட பூசை வழிபாடுகள் நடைபெற்றன.

பூசை வழிபாடுகளின் பின்னா கௌரவம் பெறும் கலைஞர்களும், அறிஞர்களும் விழா மண்டபம் வரை மேள வாத்தியம் சகிதம் ஊர்வலமாக அழைத்து வரப்பட்டனர்.

இவ் வைபவத்தில் துணைவேந்தர் பொ. பாலசுந்தரம்பிள்ளை உரையாற்றும் போது மேலும் கூறியதாவது:

இந்து சமயப் பேரவையை பல நிலைகளில் நிறுவன அமைப்பு வலுப்படுத்தப்பட்ட, கட்டுக்கோப்பான ஒரு ஸ்தாபனமாகவும் நிதி வசதியுடைய, ஆளுமை மற்றும் ஆற்றலுடைய ஆளணிகளையும் கொண்ட ஸ்தாபனமாகவும் மேன் மேலும் வளர்த்தெடுக்க வேண்டும். இந்தப் பணிக்கு எங்களுடைய பிரதேச மக்கள் ஒத்துழைப்பு வழங்க வேண்டும்.

*பாடசாலைகள் ஊடாக சமயப்பணி*

1960ஆம் ஆண்டுகளுக்கு முன் இந்தப் பிரதேசத்தில் தலைவர் இராஜரத்தினம் 'இந்துபோர்ட்' பாடசாலைகள் ஊடாக ஒவ்வொரு கிராமத்திலும் சைவசமயப் பணிகளை சிறப்புற நடத்தி வந்தார்.

அரசாங்கம் பாடசாலைகளைப் பொறுப்பேற்றதன் பின்னர் அந்த வாய்ப்பும் இல்லாமற்போய் விட்டது.

எல்லோருமே கைவிட்ட நிலையில் நாங்கள் இன்று இருக்கிறோம். மனிதனை சமூக, பொருளாதார பிரச்சினைகளிலிருந்தும் சமய நிறுவனங்கள் தமது உதவிமூலம் விடுவிக்க வேண்டும். எமது சமயம் ஏழைகளுக்கும் மற்றும் யுத்தத்தினால் பாதிக்கப்பட்டவர்களுக்கும் வழிகாட்டியாக இருக்க வேண்டும்.

எத்தனையோ சிறார்கள் கல்வியை இழந்து நிற்கின்றார்கள். இவர்களுக்கு [illegible] இல்லாவது நாம் [illegible] வேண்டும்.

*அமைப்புகளுக்கு அங்கீகாரம்*

நாதஸ்வரம், தவில், சிற்பக்கலைகள் போன்ற கலைகளை பல்கலைக்கழகத்தில் பயிற்றுவிக்க முடியாது. இவற்றை வேறு வடிவங்களில் வளர்க்கலாம். பல நாடுகளும் அவ்வாறே செய்கின்றன.

இந்தக் கலைஞர்களின் ஆற்றலை நிறுவனமயப்படுத்தினால் பல்கலைக்கழகம் அதற்கு அங்கீகாரத்தை வழங்கும்.

வட இலங்கை சங்கீத சபையோ, ஆரிய திராவிட பாஷா அபிவிருத்திச் சங்கத்தினரோ, இசை வேளாளர் சங்கமோ அந்தந்தத் துறைகளில் மாணவர்களைப் பயிற்றுவித்து ஒரு தரத்தைப் பெற்று வரும் பொழுது அவர்களுடைய நிறுவனங்களை பல்கலைக்கழகம் அங்கீகரிக்கும்.

பல்கலைக்கழகம் முழுமையாகப் பொறுப்பை ஏற்காது. ஆனால் நிறுவனங்கள் அதனை வளர்த்தெடுக்கும் போது அதற்குரிய அங்கீகாரம் கிடைக்கும். அத்தகைய நிலைக்கு பல்கலைக்கழகத்தை நாங்கள் இட்டுச் செல்லுவோம்.

அமெரிக்கா, கனடா போன்ற நாடுகளில் இத்தகைய முறை உண்டு.

எதிர் காலங்களில் மக்களால் கௌரவிக்கப்படுபவர்களைப் பல்கலைக்கழகமும் பரிசீலனை செய்து பட்டமளிப்பு விழாக்களில் கௌர[illegible] மற்றும் கைத்தொழில், விவசாயம், மீன்பிடி, கட்டடக்கலை போன்ற துறைகளில் பங்களிப்புச் செய்தவர்களுக்கு நாங்கள் பட்டங்களை வழங்கிக் கௌரவிப்போம்— என்று சொன்னார்.

*விழாவின் தனிச் சிறப்பு*

பிரதம விருந்தினர்களில் ஒருவரான மல்லாகம் மாவட்ட நீதிபதி மு. திருநாவுக்கரசு உரையாற்றும் போது கூறியதாவது:—

இன்று நாம் இந்த நாட்டிலே நொடிந்துபோய் வக்கற்று, வகையற்று ஒரு வகையிலே திக்கற்று வாழ்ந்து கொண்டிருக்கிறோம். இப்படித்தான் இந்த இனம் முன்பும் வாழ்ந்ததோ என்று இளைய சந்ததியினர் எண்ணுவார்கள்.

இந்துப் பெருமக்கள் ஒப்பரிய சைவத்தையும் தமிழையும் தமது கண்களாக நேசித்து வளர்த்த ஒரு வரலாறு சமுமணித் திருநாட்டில் இருக்கின்றது என்பதை இளைய தலைமுறையினர் மறந்து விட்டார்கள்.

வளங்கள் பலவும் குன்றி மக்கள் சமய நெறியிலிருந்து தவறிக் கெட்டு, நிலை கெட்டு, வாழ்வற்று, வக்கற்றுத் தவிக்கின்ற ஒரு காலத்திலே இந்து சமயப் பேரவை அளப்பரிய சேவையாற்றுகின்றது.

இங்கே வாழ்கின்ற இந்துப் பெருங்குடி மக்கள் இன்னல்களின் மத்தியிலும், சிவநெறிப் பண்பும் சைவத்தின் மேல் ஆர்வமும் கொண்டு தமிழ்க் கலையையும் கலாசாரத்தையும் பேணிப் பாதுகாக்கின்ற ஒரு பாரம்பரியத்தின் சின்னமாக வாழ்கிறார்கள் என்பதை எடுத்துக் காட்டுவதாக இந்தக் கௌரவ பட்டமளிப்பு விழா நடைபெறுகிறது. இது ஒரு தனிச் சிறப்பாகும்.

மக்களுடன் வாழ்ந்து சேவையாற்றுகின்ற கலைஞர்களுக்கு கௌரவம் அளிக்கப்படுகிறது. துன்பத்தின் மத்தியிலும் கொடிய வறுமையிலும் ஒப்பரிய சேவையைச் செய்து வரும் இந்து சமயப் பேரவையைப் பாராட்டுகிறோம் — என்று கூறினார்.

சாவகச்சேரி மாவட்ட நீதிவான் எஸ். ஏ. சு. ஏகநாதன், இந்துசமயப் பேரவை உபதலைவர் ஆ. மகாலிங்கம் ஆகியோர் பாராட்டுரை வழங்க நல்லை ஆதீன குருமுதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் ஆசியுரை வழங்கினார்.

சிவஸ்ரீ சோ. சுப்பிரமணியக் குருக்கள், அமரர்கள் மு. ஞானப்பிரகாசம், க. கனகராசா மற்றும் நா. வி. நவரத்தினம், என். கே. பத்மநாதன், தெட்சணாமூர்த்தி உதயசங்கர், ஆறுமுகம் சிவரத்தினம், சு. பாஸ்கரன் ஆச்சாரியார், வ. சுப்பிரமணியம், ந. வீரமணிஐயர், எஸ். மகேந்திரன் ஆகியோருக்கு கௌரவப்பட்டங்களும் விருதுகளும் வழங்கப்பட்டன.

கௌரவிப்பு நிகழ்வைத் தொடர்ந்து 'இந்து தர்மம்' ஆத்மீக சஞ்சிகை வெளியீடும் இடம்பெற்றது. சஞ்சிகை வெளியீட்டுரையை யாழ். பல்கலைக்கழக இந்து நாகரிகத்துறைத் தலைவர் பேராசிரியர் ப. கோபாலகிருஷ்ணன் நிகழ்த்தினார்.

சஞ்சிகையின் சிறப்பு பிரதிகளை யாழ். வர்த்தகர்கள் பெற்றுக்கொண்டனர். (ஐ-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### இந்தோனேஷியாவில் இடம்பெற்ற

# பாலியல் வல்லுறவு குறித்து ஐ.நாவின் முறையிட முயன்ற பெண் கொலை

இந்தோனேஷியாவில் கடந்த மேமாதம் நடந்த வன்செயல்களின் போது பாலியல் வல்லுறவுக்குட்படுத்தப்பட்ட பெண்களுக்கு நீதிகிடைக்கப் பாடுபட்ட இளம்பெண் கொல்லப்பட்டார்.

மார்டாடினாடா என்ற 18 வயதுடைய இளம்பெண்ணே கொலையுண்டார். உடம்பு முழுவதும் கத்தியால் குத்தப்பட்ட காயங்களுடன் குரல்வளை வெட்டப்பட்ட நிலையில் அவரது சடலம் அவர் குடியிருந்த வீட்டில் கண்டுபிடிக்கப்பட்டது.

இக்கொலைதொடர்பாக மார்டாடினாடாவின்வீட்டிற்கருகில் வசிக்கும் சார் என்ற இளைஞர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கொலை செய்யப்பட்ட மார்டாடினாடா கடந்தமே மாதம் இந்தோனேஷியாவில் பாலியல் வல்லுறவுக்குட்படுத்தப்பட்ட பெண்களுக்குத்தேவையான ஆலோசனைகளை வழங்கி வந்தார். பாதிக்கப்பட்ட இந்தப்பெண்கள் சிலருடன் அமெரிக்கா சென்று ஐ. நா. சபையில் முறையிடுவதற்கான ஏற்பாடுகளை இவர் அண்மையில் மேற்கொண்டிருந்தாரென தகவல்கள் கூறுகின்றன.

இதன் காரணமாக இவர் கொல்லப்பட்டிருக்கலாமென சந்தேகம் கிளம்பியுள்ளது. இதனை ஜகார்த்தா பொலீஸ் தலைவர் மறுத்துள்ளார்.

மார்டாடினாடாவீட்டில் சந்தேக நபர் திருடச்சென்ற போதே இக்கொலை நடந்துள்ளதாகவும் பொலீஸ் தலைவர் கூறினார்.

கடந்த மேமாதம் இந்தோனேஷியாவில் 160 பெண்கள் பாலியல் வன்முறைக்குட்படுத்தப்பட்டதாக மனித உரிமைகள் அமைப்புகள் தெரிவிக்கின்றன. இச்சம்பவங்களில் இராணுவ வீரர்களுக்குத் தொடர்பு இருப்பதாகவும் கூறப்படுகிறது.

இதேவேளையில் பாதிக்கப்பட்ட பெண்களுக்கு நீதி கிடைக்கப் பாடுபடும் பலர் அச்சுறுத்தப்பட்டுள்ளதாகவும் முறைப்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

(ஐ-10)

# யெல்ட்சின் சுகவீனம்; மொஸ்கோ திரும்பினார்

மொஸ்கோ, ஒக். 15

ரஷ்ய அதிபர் பொரிஸ் யெல்ட்சின் தனதுபயணத்தை இரத்துச் செய்து மொஸ்கோ திரும்பியுள்ளார்.

கடந்த திங்களறு முன்னாள் சோவியத் குடியரசான கசகஸ்தானுக்கு பயணம் மேற்கொண்டு அந்த நாட்டு விமான நிலையத்தில் இறங்கும் போது யெல்ட்சினுக்கு சுவாச நோய் ஏற்பட்டது.

அதனை அடுத்தே அவரது பயணம் இரத்துச் செய்யப்பட்டது.

67 வயதான யெல்ட்சின் உடல் நலம் குன்றியவர் என்பதும் -

இரண்டு வருடங்களுக்கு முன் இருதய அறுவைச் சிகிச்சைக்கு உட்படுத்தப்பட்டவர் என்பதும் — குறிப்பிடத்தக்கது.

(இ-ரி)

## காந்தி பெயரில் ஜேர்மனியில் வீதி

பொன், ஒக். 15

ஜேர்மனியின் ருர்ஹாட் கமரில் உள்ள வீதி ஒன்றுக்கு மகாத்மாகாந்தியின் பெயர் சூட்டப்பட்டுள்ளது.

மகாத்மா காந்தியின் ஐம்பதாவது ஆண்டு நினைவு தினத்தை ஒட்டியே இப்பெயர் சூட்டப்பட்டது.

(இ-ரி)

## கிழக்கு நகரம் கிளர்ச்சியாளர் வசம்

கின்ஸாசா, ஒக். 15

அரச படையினருடன் நடந்த கடும் சண்டைக்குப் பின்னர் கிழக்கு நகரான கிண்டுவை தாம் கைப்பற்றி விட்டதாக கொங்கோ ஜனநாயகக் குடியரசு கிளர்ச்சியாளர்கள் அறிவித்துள்ளனர்.

(ஐ)

# ரஷ்யாவில் மீண்டும் கம்யூனிஸம் மலரும்

## கட்சிச் செயலர் நம்பிக்கை

கல்கத்தா, ஒக். 15

ரஷ்யாவில் மீண்டும் ஆட்சியைக் கைப்பற்றுவது குறித்து கம்யூனிஸ்டுகள் அதிக நம்பிக்கை கொண்டுள்ளதாக ரஷ்யக் கம்யூனிஸ்ட் கட்சியின் செயலர் நிகுலாய்பினுகோவ் தெரிவித்துள்ளார்.

அதிபர் பொறிஸ் யெல்ட்சினின் ஆட்சி மீது மக்களுக்கு அதிருப்தி ஏற்பட்டிருப்பதே இதற்குக் காரணம் என்றும் அவர் தெரிவித்தார்.

இந்தியாவுக்கு விஜயம் செய்துள்ள அவர் கல்கத்தாவில் பீ. ரீ. ஐ. செய்தியாளரிடம் இவ்வாறு தெரிவித்தார்.

ஆளும் கட்சியைத் தூக்கி எறிவதற்கு வெகுஜன இயக்கம் நடத்துவதே எங்கள் கொள்கை. ஆனால் அதற்காக ஆயுதம் ஏந்த மாட்டோம். தற்போதைய அரசியல் ஜனநாயக அமைப்புகளில் கட்சிக்கு நம்பிக்கை உள்ளது.

தற்போதைய ஆட்சியில் மிகவும் பாதிக்கப்பட்டுள்ள ஏழைகள், நடுத்தர வர்க்கம், அறிவுஜீவிகள் ஆகியோரிடம் கம்யூனிஸ்ட் கட்சி செல்வாக்குப் பெற்று வருகிறது.

சோவியத் ஒன்றியத்தில் கம்யூனிஸ்ட் கட்சி வீழ்ச்சியுற்றதற்கு, ஏகாதிபத்திய சதி போன்றவையே காரணம்.

முன்னாள் அதிபர் மிகைல் கொர்பச்சேவ் கொண்டு வந்த 'பெரஸ்துரோய்க்கா' (சீர் திருத்தம்) 'கிளாஸ்நோஸ்க்' (வெளிப்படையான நிர்வாகம்) ஆகிய நடவடிக்கைகளை ஏகாதிபத்திய வாதிகள் நன்கு பயன்படுத்தி உள்ளனர் — என்றும் அவர் கூறினார்.

( ஐ-10)

# ஈழத்தமிழ் தீவிரவாத இயக்கங்கள் எதையும் ஒருபோதும் ஆதரித்ததில்லை

## 'த வீக்' சஞ்சிகைக்கு கோபாலசாமி பேட்டி

சென்னை ஒக். 15

எந்த இலங்கைத்தமிழ்த் தீவிரவாத இயக்கத்துக்கும் நாம் ஒருபோதும் ஆதரவளித்ததில்லை, இலங்கைத் தமிழ் மக்களின் இலட்சியத்துக்கான எமது ஒருமைப்பாட்டையே வெளிப்படுத்தினோம் என்று தமிழகத்தின் மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக்கழகத்தின் பொதுச்செயலாளர் வை. கோபாலசாமி தெரிவித்துள்ளார்.

இந்தியாவின் பிரபல ஆங்கில சஞ்சிகைகளில் ஒன்றான 'தவீக்' இற்கு அளித்திருக்கும் பேட்டியொன்றிலேயே அவர் இவ்வாறு கூறியிருக்கிறார்.

அறிஞர் அண்ணாவின் 90 ஆவது பிறந்ததினத்தை முன்னிட்டு அண்மையில் சென்னையில் மறுமலர்ச்சி தி. மு. க வினர் ஏற்பாடு செய்திருந்த பேரணியில் தமிழ்ஈழ விடுதலைப்புலிகள் ஆதரவுப் போக்கை சற்று தொனி குறைத்திருந்தீர்களா? திட்டமிட்டே இவ்வாறு செய்தீர்களா என்று அவரிடம் கேட்கப்பட்ட போது —

இந்த விவகாரம் எமது அரசியல் எதிரிகளால் கிளப்பப்பட்டுள்ளது. எந்தவொரு தீவிரவாத இயக்கத்தையும் நாம் ஒரு போதும் ஆதரிக்கவில்லை, தமிழ்ஈழ இலட்சியத்துக்கான எமது ஒருமைப்பாட்டையே வெளிப்படுத்தினோம் என்று பதிலளித்தார்.

சில வருடங்களுக்கு முன்னர் இரகசியமாக யாழ்ப்பாணத்துக்குநீங்கள் சென்று வந்ததும் விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனை சந்தித்துப் பேசியதும் சகலருக்கும் தெரிந்தது தானே? என்று அவரிடம் வினவிய போது—

இலங்கைத் தமிழர்களின் அவலங்கள் குறித்து நான் கவலைப்பட்டேன். அவர்கள் மீதான அக்கறை காரணமாகவே நான் ஆபத்தையும் பொருட்படுத்தாமல் யாழ்ப்பாணம் சென்றேன் என்று கூறினார்.

(ஐ-10)

# நுவரெலியா தமிழருக்கு எதிரான துண்டுப்பிரசுரம்

நுவரெலியாவில் வசிக்கும் தமிழ் மக்களுக்கு ''சிங்கள வீர விதான'' எனும் அமைப்பினால் சிங்கள மொழியில் துண்டுப்பிரசுரங்கள் தபாலில் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. இத்துண்டுப்பிரசுரத்தில் அமைந்துள்ள விடயங்கள் இனத் துவேஷத்தைத் தூண்டும் வகையில் அமைந்துள்ளதாக இப்பகுதி தமிழ் மக்கள் முறைப்பாடு தெரிவித்துள்ளனர். துண்டுப்பிரசுரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் வருமாறு:

★ சிங்களவர்கள் இன்று பல்வேறு ஆக்கிரமிப்புகளுக்கு முகங் கொடுக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. அதில் முக்கியமானது பொருளாதார வலு ஆகும். இது சிங்களவர்களிடமிருந்து கைநழுவி வேறு இனத்தவரின் கைகளுக்குச் சென்றுள்ளது.

★ ஓர் இனம் வளர்ச்சி பெறுவதற்கு பொருளாதார ரீதியாக வலுவடைவது அவசியம். இதனை அடைவதே ''வீர விதான'' அமைப்பின் முக்கிய நோக்கம். எனவே சிங்களவர்கள் அனைவரும் இதற்காக ஒன்றுபட்டுச் செயற்படுவது அவசியம்.

★ சிங்கள இனத்தின் பொருளாதார வலுவை உயர்த்த ஒவ்வொரு சிங்களவரும் ஒத்துழைக்க வேண்டும். சிங்களவர்கள் அனைவரும் சிங்கள வியாபாரிகளிடம் பொருள்களைக் கொள்வனவு செய்வதாலும், சிங்களவர்களின் உற்பத்தியை மாத்திரம் தெரிவு செய்வதாலும் சிங்களவர்களின் பொருளாதாரத்தை வலுப்படுத்த முடியும்.

★ சிங்களவர் தமக்குச் சொந்தமான வீடு, காணி, சொத்துப் போன்றவற்றை விற்பனை செய்யும் போது கூடுமானவரை அவற்றை சிங்கள இனத்தவருக்கே விற்பனை செய்ய முயற்சிக்க வேண்டும். இவை தொடர்பான ஒப்பந்தங்கள் கணக்குப் பரிசோதனை ஆகிய வியாபார நடவடிக்கைகள் சிங்களவர்களிடமே ஒப்படைக்க வேண்டும்.

★ சிங்களவர்களுக்கு இந்நாடு மட்டுமே உள்ளது. சிறுபான்மை இனத்தவர்கள் இந்நாட்டைக் கைப்பற்றினால் எமக்கு நாடற்றுப் போய்விடும். எனவே சிங்களவர்களாகிய நாம் அரசியல் வர்க்க பேதங்களை மறந்து ஒன்றுபடுவது அவசியம்.

எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

இத்துண்டுப் பிரசுரங்கள் நுவரெலியாப் பகுதி தமிழ் மக்களிடையேகிலேசத்தைத் தோற்றுவித்துள்ளது. இவ்வாறு இனத் துவேசத்தைத் தூண்டும் வகையிலான துண்டுப் பிரசுரங்கள் தமக்கு அனுப்பட்டதன் நோக்கம் யாதெனப் புரியாது தமிழ் மக்கள் விழிக்கின்றனர்.

(ஐ-10)

# செய்திச் சாரம்

### தீபாவளிக் கொடுப்பனவு

அரியாலை, ஒக். 15

யாழ். பலநோக்கு கூட்டுறச் சங்கம் தீபாவளியை முன்னிட்டு ஊழியர்களுக்கு ஊக்குவிப்புக் கொடுப்பனவை வழங்கவுள்ளது.

கடந்த 1993 ஆம் ஆண்டு சங்கத்திற்கு ஏற்பட்ட வருமான இலாப மதிப்பீட்டில் இருந்து ஊழியர்களுக்கு ஒருமாதச்சம்பளம் தீபாவளி ஊக்குவிப்புக் கொடுப்பனவாக வழங்கப்படும்.

தீபாவளி தினத்துக்கு முன்னர் இக்கொடுப்பனவை வழங்குமாறு சங்கத் தலைவர் தலைமையகத்தைக் கேட்டுள்ளார்.

(ஐ-17)

### புதிய கட்டடம்

வடமராட்சி, ஒக். 15

வல்வெட்டித்துறை நகர சபைக்கு 40 இலட்சம் ரூபா செலவில் புதிய கட்டடம் ஒன்று அமைக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது.

(ஐ - 173)

### வீதிகள் திருத்தப்படவில்லை

வடமராட்சி, ஒக். 15

பொலிகண்டி — நலின்டில் வீதியும், இமையாணன் பாடசாலை வீதியும் நீண்ட காலமாகத் திருத்தப்படவில்லை.

இவ் வீதிகளைத் திருத்த வென கற்கள் பறிக்கப்பட்ட போதிலும் சில கற்குவியல்கள் மீது புற்கள் வளர்ந்து மூடியிருப்பதையும் [illegible] சிதறுண்டு கிடப்பதையும் காணக்கூடியதாக இருக்கிறது.

(ஐ - 173)

### 3 கால்களுடன் ஆட்டுக்குட்டி

வடமராட்சி, ஒக். 15

மூன்று கால்களை உடைய ஆட்டுக்குட்டி ஒன்றை ஆடு பிரசவித்துள்ளது.

புலோலி தெற்கு குரும்பைகட்டியைச் சேர்ந்த கே. பூமணி என்பவரால் வளர்க்கப்பட்ட ஆடே மூன்று கால்களையுடைய குட்டியை ஈன்றுள்ளது. கறுப்பு நிறமான இந்த மூன்று கால் மறிக்குட்டி சுகமாக இருக்கின்றது.

முன் பக்கத்தில் ஒரு காலும், பின் பக்கத்தில் இரு கால்களும் அமைந்துள்ளன. (ஐ-173)

### வகுப்பறை அமைக்க உதவி

உடுவில் முருகமூர்த்தி வித்தியாசாலை வகுப்பறைக் கட்டடங்கள் அமைப்பதற்கு அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் உயர்ஸ்தானிகராலயம் ஐந்து லட்சம் ரூபா நிதி வழங்கியுள்ளது. 60 அடி, 20 அடி நீள அகலம் கொண்ட வகுப்பறைக் கட்டடங்கள் கட்டப்பட உள்ளன.

சுமார் ஒரு லட்சம் ரூபா வரையான வேலைகள் பாடசாலை சமூகத்தினரது பங்களிப்புடன் மேற்கொள்ளப்படும்.

### தீபாவளித் தின விளையாட்டுப் போட்டி

வடமராட்சி, ஒக். 15

தம்பசிட்டி உதய தாரகை விளையாட்டுக் கழகம் நடத்தும் தீபாவளித் தின விளையாட்டுப் போட்டி எதிர்வரும் 18, 19 ஆம் திகதிகளில் மேலைப்புலோலி சதாவதானி கதிரவேற்பிள்ளை சனசமூக நிலைய மைதானத்தில் நடைபெறும்.

சைக்கிள் ஓட்டம், கயிறு இழுத்தல் உட்பட பல்வேறு போட்டிகள் இடம் பெறும். (ஐ-173)

### நகரசபை அலுவலகம் இடமாற்றம்

வடமராட்சி, ஒக். 15

வல்வெட்டித்துறை நகர சபை அலுவலகம் இடமாற்றப்பட்டுள்ளது.

இதுவரை காலமும் வல்வெட்டித்துறையில்— தொண்டமானாறு வீதியில் இயங்கி வந்த இந்த அலுவலகம் தற்போது பருத்தித்துறை வீதியில் வல்லை கல்வி மன்றத்துக்கு அருகில் இட மாற்றப்பட்டுள்ளது. (ஐ-173)

### கிராம அபிவிருத்திச் சங்கம் புனரமைப்பு

அச்செழு கிராம அபிவிருத்திச் சங்க மண்டபம் சுமார் நாலரை லட்சம் ரூபா செலவில் புனரமைக்கப்பட உள்ளது.

ஐக்கிய நாடுகள் உயர்ஸ்தானிகராலயத்தின் நிதி உதவியுடன் இப்பணி நடைபெறும். (ஐ 173)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெள்ளைப் பிரம்பு தினத்தை ஒட்டி

# நாளை நகரில் ஊர்வலம், கூட்டம்

யாழ்ப்பாணம், ஒக். 15

வெள்ளைப் பிரம்பு தினத்தை ஒட்டி ஊர்வலமும் பொதுக் கூட்டமும் நாளை வெள்ளிக்கிழமை யாழ். நகரில் நடைபெறவுள்ளன.

யாழ். மத்திய கல்லூரியில் இருந்து யாழ். நகர பகுதி ஊடாக பெருமாள் கோயில் வரை வெள்ளைப்பிரம்பு தின ஊர்வலம் இடம்பெறும். அதனைத் தொடர்ந்து பிற்பகல் ஒரு மணியளவில் யாழ். சன்மார்க்க வித்தியாலயத்தில் பொதுக்கூட்டம் நடைபெறும்.

இந்நிகழ்வினை யாழ். லயன்ஸ் கழகத்துடன் இணைந்து யாழ். விழிப்புலனற்றோர் சங்கம், யாழ். மாவட்ட லியோக் கழகம், மற்றும் சென். ஜோன்ஸ் கல்லூரி, சுண்டுக்குளி மகளிர் கல்லூரி, யாழ். இந்துமகளிர் கல்லூரி, யாழ். மத்திய கல்லூரி, யாழ். இந்துக்கல்லூரி ஆகியவற்றில் இயங்கும் லியோக் கழகங்கள் நடத்துகின்றன. (ஐ-173)

## விளையாட்டு விழா

யாழ்ப்பாணம், ஒக். 15

தொல்புரம் கிழக்கு விக்கினேஸ்வரா சனசமூக நிலையத்தினால் நடத்தப்படும் முன்பள்ளிக் கல்வி நிலையத்தின் வருடாந்த விளையாட்டு விழா எதிர்வரும் 18 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு மேற்படி சனசமூக நிலையத் தலைவர் திரு. உதயசூரியன் தலைமையில் இடம்பெறவுள்ளது.

வலி. மேற்குப் பிரதேச சபைத்தலைவர் த. திரிலோகநாதன் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார். (ஐ-7)

# படகுகளில் வந்த அகதிகள் ஷெல் தாக்குதலால் பீதி

அரியாலை, ஒக். 15

கடந்த திங்கட்கிழமை இரவு வன்னியில் இருந்து குடாக்கடல் ஊடாக வந்த மக்கள் பலாலியில் இருந்து மேற்கொள்ளப்பட்ட ஷெல் தாக்குதலினால் பதற்றமடைந்தனர். இதனால் அவர்கள் பாஷையூர்க் கடலில் உள்ள அந்தோனியார் திருச்சொரூபப்பகுதியில் தஞ்சமடைந்தனர்.

அகதிகள் இரவு வேளை குடாக்கடலூடாக வள்ளங்களில் வந்த சமயம் பரா வெளிச்சம் பாய்ச்சப்பட்டு ஷெல் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது.

அந்தோனியார் சொரூபப்பகுதியில் தஞ்சமடைந்திருந்த அவர்கள் மறுநாள் காலை குருநகரில் உள்ள நலன்புரி நிலையங்களில் தங்கவைக்கப்பட்டனர்.

இதேசமயம் — நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை இரவு 7 மணியளவில் பாஷையூர், குருநகர்ப் பகுதி கரையோரங்களில் துப்பாக்கி வேட்டுச்சத்தங்கள் கேட்ட வண்ணம் இருந்தன.

சுமார் இரு மணி நேரம் விட்டு விட்டு துப்பாக்கி வேட்டுக்கள் கடற்பகுதியில் தீர்க்கப்பட்டன. (ஐ-17)

## மிதிவெடி அபாயம்

கோக்குவில் தொழில்நுட்பக் கல்லூரிக்கு அண்மையில் உள்ள யாழ் திறந்த பல்கலைக்கழக வளவைச் சுற்றி மிதிவெடிகள் புதைக்கப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

எனவே திறந்த பல்கலைக்கழகத்திற்கு வருவோர் அவதானமாக நடந்து கொள்ளுமாறு அதன் இயக்குநர் தெரிவித்துள்ளார். (ஐ-185)

# சந்தையில் வைத்தே மாடு வெட்டப்படுகிறது!

## மக்கள் அதிருப்தி

வலி. வடக்கு, ஒக். 15

சுன்னாகம் மீன் சந்தையில் வைத்தே இறைச்சித் தேவைக்கான மாடுகள் வெட்டப்படுகின்றன. அதிகாலை நேரம் நடைபெறும் இச்செயலை அதிகாலை மரக்கறிச் சந்தைக்கு வரும் பொதுமக்கள் கூடிநின்று வேடிக்கை பார்க்கின்றனர்.

மாட்டின் எச்சங்களும் அப்பகுதியிலேயே கைவிடப்படுகின்றன. பொதுமக்கள் இதுபற்றி அதிருப்தி அடைந்துள்ளனர். முன்னர் மாடுகள் சுமார் ஒரு மைலுக்கு அப்பால் உள்ள மயானப் பகுதியில் வைத்து வெட்டப்பட்டு வந்தன. (ஐ-86)

## கலைஞரைக் கௌரவிக்கும் விழா

முதுகலைஞர் மிருதங்க கலாவித்தகர் க. ப. சின்னராசா 'கலாபூஷணம்' விருது பெற்றதைப் பாராட்டி அவரைக் கௌரவிக்கும் விழா எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 1.30 மணியளவில் இணுவில் கந்தசுவாமி கோயில் இளந்தொண்டர் சபையினரின் ஏற்பாட்டில் இளந்தொண்டர் சபை மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

மஹா வித்துவான் பிரம்மஸ்ரீ நா. வீரமணி ஐயர் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் வலிகாமம் தெற்கு பிரதேச செயலர் ஆ. மகாலிங்கம் பிரதமவிருந்தினராகக் கலந்துகொள்வார்.

ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள், அருட்கவி சீ. விநாசித்தம்பி, பிரம்மஸ்ரீ த. உருத்திரமூர்த்திக் குருக்கள், எஸ். கணேசலிங்கக் குருக்கள் ஆகியோர் ஆசியுரை வழங்குவர்.

பல கல்வியாளர்களும், அறிஞர்களும் பாராட்டுரை வழங்க உள்ளனர். (ஐ-152)

நல்லூர்ப் பிரதேச செயலர் பிரிவில்

# உதவிப் பணம் பெறுவோர் விவரங்கள் மீளாய்வு

யாழ்ப்பாணம், ஒக். 15

நல்லூர்ப் பிரதேச செயலர் பிரிவில் மாதாந்த பொதுசன உதவிப் பணம் பெறுவோர் பற்றிய விவரங்கள் மீளாய்வு செய்யப்பட்டு வருகின்றது.

நல்லூர்ப்பிரதேச செயலக சமூக சேவை உத்தியோகத்தர் செ. யோகானந்தராஜா தலைமையில் கிராம சேவையாளர் அலுவலகங்களுக்கு நேரடியாகச் செல்லும் குழுவினரே மேற்படி மீளாய்வு வேலைகளைச் செய்து வருகின்றனர்.

உதவிப் பணம் பெறுவோர் பற்றிய விவரங்கள் மீளாய்வு செய்யப்படுவதன் மூலம் வறிய குடும்பங்களைச் சேர்ந்த மேலும் சிலருக்கு உதவிப் பணம் வழங்கக் கூடியதாக இருக்கும் என மேற்படி பிரதேச செயலக சமூக சேவைப் பிரிவினர் தெரிவித்துள்ளனர். (ஐ-7)

# புதிய நூற்றாண்டை எதிர்கொள்ள கணனி, ஆங்கில அறிவு அவசியம்

## கருத்தரங்கில் உரை

வலிகாமம் தெற்கு, ஒக். 15

"எதிர்காலத் தேவை கருதி யாழ்ப்பாணத்து இளைஞர்கள் கணனிகள் பற்றியும் அவற்றின் செயற்பாடுகள் பற்றியும் அடிப்படை அறிவையாவது பெற்றுக் கொள்ள வேண்டும். கணனி பற்றி வெளிவரும் சஞ்சிகைகளை தவறாது பெற்று அறிவை வளர்த்துக் கொள்வதுடன் ஆங்கில அறிவையும் வளர்த்துக் கொள்ள வேண்டும்."

'கணனியின் அறிமுகம் சர்வதேச வலைப்பின்னலும்' பற்றி கருத்துரை வழங்கிய டி. சி. எஸ். நிலைய கணனி விரிவுரையாளர் வி. சிவகுமார் மேற்கண்டவாறு கூறினார்.

சுன்னாகம் றோட்டரக்ட் கழகத்தினரால் மருதனார்மடம் இராமநாதன் கல்லூரியில் ஒழுங்கு செய்யப்பட்ட இக்கருத்தரங்கு எஸ். கணேந்திரா தலைமையில் நடைபெற்றது.

வி. சிவகுமார் தமது உரையில் மேலும் கூறியதாவது:-

கணனியின் செயற்பாடுகள் இலங்கையின் எல்லாப்பகுதிகளிலும் தீவிரமாக இடம்பெற்றுவரும் இன்றைய காலத்தில் யாழ்ப்பாணத்து இளைஞர்கள் பலரும் கணனி பற்றிய அடிப்படை அறிவைக்கூட பெற்றுக் கொள்ளாதவர்களாக உள்ளனர்.

கணனியுகம் 'இன்ரநெற்' யுகம் என வளர்ச்சியடைந்து இன்னொரு நூற்றாண்டுக்குள் உலகம் பிரவேசிக்க இருக்கின்றது.

இக்காலகட்டத்தில் கணனிகள் 'இன்ரநெற்' போன்றவற்றின் செயற்பாடுகளை அனைவரும் அறிந்திருக்க வேண்டும்.

யாழ்ப்பாணத்தை விட்டு வெளியே செல்வதாக இருந்தால் ஆங்கில அறிவும், கணனிகளை கையாளக் கூடிய அடிப்படை அறிவும் தெரிந்திருக்க வேண்டியது அவசியமாகின்றது.

யாழ்ப்பாணத்து இளைஞர்கள் அதற்குத் தம்மைத் தயார்படுத்திக் கொள்ள வேண்டும் என்று தெரிவித்தார். (ஐ-[illegible])

# வலி. தெற்கில் மேலும் சில இடங்களுக்கு மின்

வலிகாமம்தெற்கு, ஒக். 15

சுன்னாகத்தை சுற்றியுள்ள கிராமங்களுக்கு மின்சாரத்தைச் சீராக வழங்கவும், மேலும் சில பகுதிகளுக்கு மின்சார வசதி அளிக்கவும் இலங்கை மின்சார சபையினர் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

சுன்னாகம் மின்சார நிலையத்தில் ஏற்கனவே பழுதடைந்து இயங்காதிருந்த ஆயிரம் கே. வி. ஏ. மின்சார இயந்திரம் ஒன்று இதன் பொருட்டு பழுது பார்க்கப்பட்டு இயங்க வைக்கப்பட்டுள்ளது.

மேற்படி இயந்திரத்தை இயங்க வைத்ததன் மூலம் சுன்னாகம், உடுவில் போன்ற பகுதிகளில் நிலவி வந்த மின்சாரப் பற்றாக்குறை சீர்செய்யப்பட்டுள்ளது.

கூடிய மின்சார வலுவுடன் மின்சாரம் வழங்க முடிவதால் ஏற்கனவே அமுலில் இருந்த ஒரு மணி நேர மின்வெட்டு நீக்கப்பட்டு இரவில் தொடர்ச்சியாக மின்சாரம் வழங்கப்படுகின்றது.

இவ்வாரத்தில் இருந்து மேற்படி இயந்திரத்தை உபயோகித்து சுன்னாகம், உடுவில் பகுதிகளுக்கும், உரும்பிராய், கந்தரோடை, சங்கானை, வட்டுக்கோட்டை ஆகிய இடங்களில் சில குறிப்பிட்ட பகுதிகளுக்குப் புதிதாக மின்சாரம் வழங்கப்பட்டு வருகின்றது.

காங்கேசன்துறையில் இருந்து சுன்னாகம் உபநிலையம் ஊடாக யாழ்ப்பாண குடாநாட்டுக்கான 24 மணி நேர மின்சாரத்தினை இம்மாத முடிவில் புதிய இயந்திரங்களை இயக்குவதன் மூலம் வழங்க முயற்சிகள் நடைபெறுவதாக மின்சாரசபை வட்டாரங்கள் தெரிவித்தன.

(ஐ-152)

# வாசகர் திருமுகம்

## களவபாயக் காப்புறுதி

வடபகுதி வர்த்தகர்கள் பல்வேறு சிரமங்களின் மத்தியில் தென்பகுதியிலிருந்து பொருள்களை கப்பல் மூலம் தருவிப்பது சகலரும் அறிந்த விடயமே. வங்கிகள் ஆரம்ப காலத்தில் எம் வர்த்தகர்களுக்கு கடன் வசதி, மேலதிகப்பற்று வசதி போன்றவற்றை வழங்க பின் நின்ற போதிலும் இன்று இவ் வசதிகளைச் செய்துதர வங்கிகள் முன்வந்துள்ளமை பாராட்டுக்கு உரியதாகும்.

எனினும் நம் வர்த்தகர்கள் மேலும் சில பிரச்சினைகளை எதிர் நோக்குவது கவலை தரும் விடயமாக அமைகிறது. குறிப்பாக காப்புறுதி நிறுவனங்களினாலேயே இவை தோற்றுவிக்கப்படுகின்றன என்று கூறின் மிகையாகாது.

பலகோடி ரூபா பணத்தைக் கடனாகப் பெற்றுத் தருவிக்கும் பொருள்கள் பல்வேறு களஞ்சியங்களில் பாதுகாக்கப்படும் பொழுது தீய சக்திகள் சில களஞ்சியங்களை உடைத்து பெறுமதி மிக்க பொருள்களை களவாடுவதால் அதற்கான நட்ட ஈட்டினை உறுதிசெய்யும் களவபாயக் காப்புறுதிப் பத்திரங்களை காப்புறுதி நிறுவனங்கள் வழங்க முன்வருவதில்லை.

இதனால் வர்த்தகர்கள் பாரிய நட்டத்தை அடையும் நிலை ஏற்படுகிறது. அதுமட்டுமன்றி, வங்கிகள் இப்பத்திரங்களைப் பெற்றுக் கொள்பவர்களுக்கு மட்டுமே கடன் வழங்க முன்வருகின்றமையால் வர்த்தகர்கள் மேலும் அவல நிலைக்கு ஆளாக நேரிடுகிறது.

இந் நிலை நீடிக்கும் பொழுது தொழிலிலிருந்து விலகவோ கூடிய விலையில் பொருள்களை விற்கவோ நிர்ப்பந்தம் ஏற்படலாம் எனவே யாழ்ப்பாணப் பிரதேச காப்புறுதி நிறுவனங்களின் அதிகாரிகள் களவபாயக் காப்புறுதிப் பத்திரங்கள் ஏன் வழங்கப்படுவதில்லை என்பதை வர்த்தகர்களுக்கு விளக்குவார்களா?

கடன்பெற முடியாமல் பாதிக்கப்பட்ட
வர்த்தகர் ஒருவர்

யாழ்ப்பாணம்.

## அதிபர்களின் 1995 ஆம் ஆண்டின் நிலுவைக் கொடுப்பனவு

1995 ஆம் ஆண்டிலிருந்து ஆசிரியர்கள் அனைவரும் ஆசிரியசேவையில் உள்வாங்கப்பட்டு அவர்களுக்குரிய கொடுப்பனவுகள் யாவும் வழங்கப்பட்டாயிற்று. ஆயினும் இன்னும் ஒரு தொகுதி ஆசிரியர்கள் ஆசிரிய சேவையில் உள்வாங்கப்படாமலிருப்பது உண்மை தான்.

இதே வேளை பல வருடகாலம் அதிபர்களாகப் பணிபுரிந்தவர்கள் அதிபர்கள் சேவையில் உள்வாங்கப் படவுமில்லை; அவர்களுக்கு அதிபர்களுக்குரிய சம்பளம் இன்னமும் வழங்கப்படவும் இல்லை. இதுவரை காலமும் பணிபுரியும் அதிபர்களுக்கு அவர்களுடைய ஆசிரிய தரத்திற்கேற்ற சம்பளமே வழங்கப்பட்டு வருகின்றது. பல அதிபர்கள் தங்களது புதிய சம்பளத்தைப் பெறாமலேயே ஓய்வும் பெற்றுள்ளார்கள்.

தற்பொழுது அதிபர் தரத்திலுள்ளவர்களுக்கு 1995 ஆம் ஆண்டுக்குரிய நிலுவைக் கொடுப்பனவு கூட இன்னமும் வழங்கப்படவில்லை. இது சம்பந்தமாகத் திருகோணமலைக் கல்வி அமைச்சு நடவடிக்கை எடுத்து வருகின்றது என்ற செய்தி கடந்த இரண்டு மாதங்களுக்கு முன்னர் உதயன் பத்திரிகையில் வெளிவந்தது, அச்செய்தியைப்பார்த்த அதிபர்கள் இன்று வரும் நாளை வரும் என எதிர்பார்த்து இலவு காத்த கிளிகள் போலாயினர்.

எனவே அதிபர்களுடைய இக் கொடுப்பனவை உடனடியாக வழங்கத் திணைக்களம் நடவடிக்கை எடுக்குமா? சம்பந்தப்பட்டவர்கள் உதயன் ஊடாகப் பதில் தருவார்களா?

பாதிப்புற்ற அதிபர்.

பருத்தித்துறை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## செம்மணி புதைகுழி விவகாரம்:

# ஆணைக்குழுத் தலைவரின் பதில் வெறும் கண்துடைப்பு முயற்சியே!

### மனிதநேய அமைப்புகள் கருத்து

யாழ்ப்பாணம், ஒக். 15

செம்மணி புதைகுழி விடயம் குறித்து கடந்த 9 ஆம் திகதி மனித உரிமைகள் ஆணைக்குழுத் தலைவரினால் யாழ். மாவட்ட மனிதநேய அமைப்புக்களின் ஒன்றியத்துக்கு அனுப்பப்பட்ட பதில் கடிதம் ஒரு கண்துடைப்பு நடவடிக்கை என்று மேற்படி ஒன்றியத்தின் கூட்டத்தில் கண்டனம் தெரிவிக்கப்பட்டது.

இக் கடிதம் தொடர்பாக மனிதநேய அமைப்புக்களின் ஒன்றிய பிரதிநிதிகள் நேற்று முன்தினம் அரசசார்பற்ற நிறுவனங்களின் இணைய அலுவலகத்தில் கூடி ஆராய்ந்தனர்.

மனித உரிமைகள் ஆணைக்குழுத்தலைவரின் கடிதம் ஒரு இனிப்பு தடவிய கடிதமாக இருக்கிறது. எனவே செம்மணி புதைகுழிகள் தோண்டுவதை வலியுறுத்தும் நடவடிக்கைகளை தொடர வேண்டும் எனவும் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

செம்மணி புதைகுழியினை தோண்டி நடவடிக்கை எடுக்குமாறு கோரி யாழ். அரச அதிபருக்கு மகஜரொன்று அனுப்புவதென்றும்குடாநாடு தழுவிய ரீதியில் சகலபொது அமைப்புக்களையும் ஒன்றுபடுத்தி எதிர்கால நடவடிக்கைகளை விஸ்தரிப்பதுடன் இது தொடர்பாக மாபெரும் கையெழுத்து இயக்கம் ஒன்றை ஆரம்பிப்பதெனவும் இக்கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது. (உ-5)

## 'லங்கா முடித்த' கப்பலில் படையினர் பொருள்கள்

யாழ்ப்பாணம், ஒக். 15

யாழ். மாவட்டத்துக்குரிய அத்தியாவசியப் பொருள்களைக் கொழும்பிலிருந்து ஏற்றி வரும் 'லங்கா முடித்த' கப்பலில் இம்முறை இராணுவத்துக்குத் தேவையான இரண்டாயிரம் மெற்றிக்தொன் பொருள்கள் எடுத்து வரப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இக்கப்பலில் ஒவ்வொரு தடவையும் 4 ஆயிரம் மெற்றிக்தொன் அத்தியாவசியப் பொருள்கள் யாழ். மாவட்டத்துக்கு எடுத்து வரப்படுவது குறிப்பிடத்தக்கது.

தற்பொழுது காங்கேசன்துறைக்கு வந்துள்ள இக்கப்பலில் இரண்டாயிரம் மெற்றிக்தொன் அத்தியாவசியப் பொருள்களே கொண்டுவரப்பட்டுள்ளன.

இராணுவத்துக்கு இரண்டாயிரம் மெற்றிக்தொன் பொருள்களே ஏற்றிவரப்பட்டமையால் அத்தியாவசியப் பொருள்களின் அளவு குறைக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இக்கப்பலில் கவசவாகனங்கள் உட்பட இராணுவ உபகரணங்கள் எடுத்து வரப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

அரிசி, மா, சீனி, பருப்பு உட்பட யாழ். மாவட்டத்துக்குத் தேவையான 4 ஆயிரம் மெற்றிக்தொன் பொருள்களை ஏற்றுவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்ட போதும் இராணுவத்தினருடைய பொருள்கள் ஏற்றப்பட்டமையினால் அத்தியாவசியப் பொருள்கள் இரண்டாயிரம் மெற்றிக்தொன் ஆகக் குறைத்து ஏற்றப்பட்டது.

'லங்கா முடித்த' கப்பலில் படையினரின் பாவனைக்கு எடுத்து வரப்பட்ட கவச வாகனம் ஒன்று படையினருடன் கடலில் மூழ்கியது தெரிந்ததே. (உ-5)

## காணாமற்போன மீனவர் ஐவரும் திரும்பினர்

செம்பியன்பற்று, ஒக். 15

வடமராட்சிப் பகுதியில் இருந்து கடந்த 7 ஆம் திகதி வடமராட்சி கிழக்குப் பகுதிக்கு மீன் பிடிக்கச் சென்று காணாமற்போன ஐந்து மீனவர்களும் நேற்று முன்தினம் வீடு திரும்பினர்.

ஊரடங்கு வேளையில் நடமாடியதாகத் தெரிவித்து படையினர் மேற்படி மீனவர்களை மருதங்கேணியில் வைத்துக் கைது செய்து, தடுத்து வைத்து விசாரணைகளை மேற்கொண்டதன் பின்னர் அவர்களை விடுவித்ததாகத் தெரிவிக்கப்பட்டது.

மேற்படி மீனவர்கள் ஐவரும் கரவெட்டி, கரணவாய்ப் பகுதிகளைச் சேர்ந்தவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. (உ-36-8-7)

## இடைநிறுத்தம்

யாழ்ப்பாணம், ஒக். 15

யாழ். குடாநாட்டிலிருந்து கொழும்புமுதலிய பிற இடங்களுக்கு தபால் மூலம் வீடியோக்கசற்றுக்களை அனுப்பி வைக்கும் பணிகள் தற்காலிகமாக இடைநிறுத்தி வைக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

குடாநாட்டிலிருந்து தென்பகுதிக்கு அனுப்பி வைக்கப்படும் வீடியோக்கசற்றுக்கள் யாழ். சிவில் நிர்வாகக் காரியாலயத்தில் பரிசோதிக்கப்பட்ட பின்னரே அனுமதிக்கப்படுவது வழமையாகும்.

தற்போது வீடியோக்கசற்றுக்களைப் பரிசோதிப்பதற்குப்பயன்படும் 'டெக்' பழுதடைந்ததைத் தொடர்ந்து வீடியோக்கசற்றுக்களைத் தென்பகுதிக்கு அனுப்பி வைக்க முடியாதுள்ளதாக யாழ். பிரதம தபாலதிபர் எஸ். கோடீஸ்வரன் அறிவித்துள்ளார். (உ-7)


## அந்தியேட்டி அழைப்பு

| தோற்றம் | | மறைவு |
|---|---|---|
| 12 | | 16 |
| 01 | | 09 |
| 1905 | | 1998 |



திருமதி
### வள்ளியம்மை அருணாசலம்

எமது தாயாரின் ஆத்ம சாந்திக்கிரியைகள் 16-10-98 வெள்ளிக்கிழமை அம்பலை நெல்லண்டை முத்துமாரி அம்மன் தேவஸ்தான அந்தியேட்டி மடத்திலும் அதனைத் தொடர்ந்து மதியபோசனம் பாரத்தித்துறை சிவன்கோயில் பர்வதவர்த்தனி சுவாமண்டபத்திலும் நடைபெறும்.

இந்நிகழ்வுகளில் உற்றார், உறவினர்கள், நண்பர்கள் யாவரும் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றேன்.

அ. சோமசுந்தரம்பிள்ளை (மகன்),
பட்டயக் கணக்காளர்,
ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

துன்னாலை கிழக்கு,
கரவெட்டி.
(59754)


# கொழும்பு நகரில் 'ஜிகாத்' ஊடுருவல்

கிழக்கு மாகாணத்தில் சட்ட விரோதமாக இயங்கிய 'ஜிகாத்' என்ற ஆயுதக் குழு கொழும்புப் பிரதேசத்திற்குள் ஊடுருவியிருப்பதாகத் தகவல் கிடைத்துள்ளது என்று பிரதிப் பொலீஸ் மா அதிபர் எச். எம். பி. கொட்டகெதெனிய தெரிவித்தார்.

''ஜிகாத் இயக்கம் பற்றி பல தகவல்கள் வெளிவந்துள்ளன. இவர்களுடைய பல ஆயுதக் களஞ்சியங்கள் கொழும்புச் சுற்றுப்புறப் பகுதியில் உள்ளதாகத் தெரிகிறது.

''பல கொலைகள், கொள்ளைகளுடனும் இவர்களுக்கு தொடர்புகளுள்ளது.

''கிழக்கு மாகாண வன்செயல்களைக் காரணம் காட்டி அகதிகள் என்ற பெயரில் இவர்கள் கொழும்புக்குள் ஊடுருவியுள்ளார்கள்.

''இது குறித்து விசாரணைகளை மேற்கொள்ளுமாறு தேசிய புலனாய்வுப் பிரிவினருக்கு பணிப்புரை விடுக்கப்பட்டுள்ளது'' — என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (உ-21)


## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



அமரர்
### சரவணை மாணிக்கவாசகர்
[உரிமையாளர் யாழ். றூபி போட்டோ அன் வீடியோ]

அன்னை மடியில்: 25-05-1943
இறைவன் அடியில்: 16-09-1998

ஆதரிக்க ஆயிரம் உறவு உண்டு
அரவணைக்க ஆயிரம் உள்ளம் உண்டு
அப்பா என்று அழைக்க நீ இல்லையே
மண்ணுலகை விட்டு நீங்கள் பிரிந்த போதும்
எங்கள் இதயங்களில் என்றும் வாழ்வீர்கள்
என்றும் உங்கள் ஆத்மா சாந்தியடைய
பிரார்த்திக்கின்றோம்.

எங்கள் குடும்பத்தலைவனின் இறுதிக் கிரியைகளில் நேரடியாகக் கலந்து கொண்டவர்களுக்கும் அனுதாபச் செய்தி அனுப்பியோருக்கும் துயரில் பங்கு கொண்டோருக்கும் பல் வேறு வழியில் உதவி புரிந்து ஆறுதல் கூறிய உற்றார், உறவினர், நண்பர்கள் அயலவர்கள் மற்றும் அனைவருக்கும் எமது இதய பூர்வமான நன்றியைத் தெரிவித்துக் கொள்வதோடு நாளை வெள்ளிக்கிழமை 16-10-1998 எமது இல்லத்தில் நடைபெறும் அந்தியேட்டி ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் மதிய போசனத்திலும் கலந்து சிறப்பித்துக் கொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்களை அன்புடன் அழைக்கின்றோம்.

பிரிவால் துயருறும்:
மனைவி, பிள்ளைகள்,
குடும்பத்தினர்களும்.

கல்வளை வீதி,
சண்டிலிப்பாய்.
(59925)



# மீண்டும் ஒரு மாபெரும் மலிவு விற்பனை

எதிர்வரும் தீபாவளித் திருநாளை முன்னிட்டு

வெளிநாட்டிலிருந்து பிரத்தியேகமாகத் தருவிக்கப்பட்ட அனைத்து வகை புடைவைத் தினுசுகளையும் மாபெரும் மலிவு விற்பனையில் பெற்றுக் கொள்ள இன்றே நாடுங்கள்:

## ரவி அன் ராஜ் சில்க்ஸ்

77, பெரியகடை, யாழ்ப்பாணம்.

(59874)


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# மட்டு. மாவட்டத்துக்கு மீண்டும் லக்ஸபான மின்சாரம் கிடைத்தது

மட்டக்களப்பு, ஒக். 15

மட்டக்களப்பு மாவட்டத்துக்கான — ஹபறணை ஊடான — லக்ஸபான மின் விநியோகம் நேற்று முன்தினம் முதல் வழமைக்குத் திரும்பியது.

கடந்த சனிக்கிழமை இரவு சந்திவெளியில் நான்கு மின கோபுரங்கள் தகர்க்கப்பட்டதை அடுத்துமட்டக்களப்பு மாவட்டத்தின் வடக்குப் பிரதேசத்திற்கான மின விநியோகம் துண்டிக்கப்பட்டது.

இராணுவப் பாதுகாப்புடன் மேற்கொள்ளப்பட்ட திருத்த வேலைகள் பூர்த்தியடைந்ததை அடுத்து மின் விநியோகம் சீரானது.

அதே நேரம் மட்டக்களப்பு மாவட்டத்தின் தென் பிரதேச மின்சார விநியோகம் இதுவரை வழமைக்குத் திரும்பவில்லை.

இராணுவக் கட்டுப்பாடு அற்ற பிரதேசமானபோரதீவு சந்தியில மூன்று மின்கம்பங்கள் தகர்க்கப்பட்டுள்ளன.

இதனைத் திருத்தம் செய்வதற்கு புலிகளின் அனுமதி இன்னும் கிடைக்காததால் மின்சார சபை ஊழியர்கள் காத்திருப்பதாகக் கூறப்படுகின்றது.

இதனால் மட்டக்களப்பு மாவட்டத்துக்கான —இங்கினியாகல மின்விநியோகம் தொடர்ந்து துண்டிக்கப்பட்டுள்ளது.

இங்கினியாகலமின்விநியோகம் வழமைக்குத் திரும்பும் வரை சுழற்சி அடிப்படையில் லக்ஸபான மின் விநியோகம் மாவட்டம் முழுவதும் வழங்கப்படுமென மின்சார சபை தெரிவித்துள்ளது.

(உ-21)

## ஜி. சீ. ஈ. பரீட்சைக்காக

# தபால் அடையாள அட்டை பெற விண்ணப்பிக்குக!

யாழ்ப்பாணம், ஒக். 15

எதிர்வரும் டிசம்பர் மாதம் நடைபெறவிருக்கும் ஜி.சி.ஈ. சாதாரண தரப் பரீட்சைக்கு ஆள் அடையாளத்தை நிரூபிப்பதற்காக அஞ்சல் அடையாள அட்டையைப் பெற விரும்புவோர் உடனடியாக தத்தமது பிரிவு உபதபாலங்களுடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளனர்.

தேசிய அடையாள அட்டைக்குப் பதிலாக தபால் திணைக்களத்தால் வழங்கப்படும் தபால் அறிமுக அட்டையை பரீட்சை நிலையங்களில் சமர்ப்பிக்கலாம் என அறிவுறுத்தப் பட்டுள்ளமை தெரிந்ததே.

எனவே மேற்படி அடையாள அட்டையைப் பெற விரும்புவோர் பரீட்சை நெருங்கியதும் தபாலகங்களுக்குச் செல்லாமல் தற்போதே சென்று தமது விண்ணப்பங்களைச் சமர்ப்பிக்குமாறு தபால் திணைக்கள வடபிராந்திய நிர்வாக உத்தியாகத்தர் கேட்டுக்கொண்டுள்ளார்.

(உ-7)

## யாழ். வரவேண்டிய

# பல்கலை மாணவருக்கு கப்பல் வசதி கிட்டும்?

கொழும்பு, ஒக். 15

யாழ்ப்பாண பல்கலைக்கழகத்திற்கு புதிதாக அனுமதி பெற்றுள்ள வெளி மாவட்ட மாணவர்களுக்கு போக்குவரத்து வசதியளிப்பது குறித்து பல்கலைக் கழக மானிய ஆணைக்குழு நடவடிக்கைகளை எடுத்துள்ளது.

போக்குவரத்து வசதியின்மை காரணமாக வெளி மாவட்ட மாணவர்கள் யாழ். செல்ல முடியாது தற்போது கொழும்பில் தங்கியுள்ளார்கள்.

புதிய கல்வியாண்டில் விரிவுரைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதால் இம்மாணவர்களுக்கு கப்பல் மூலம் பயண ஏற்பாடுகள் செய்து கொடுக்கப்பட வேண்டுமென மட்டக்களப்புமாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராஜசிங்கம் பல்கலைக் கழக மானிய ஆணைக்குழு அதிகாரிகளிடம் கேட்டுள்ளார்.

இதன் பிரகாரம் மாணவர்கள் ஆணைக்குழுவின் சிரேஷ்ட உதவிச் செயலாளர் டி. பி. அத்துலத்முதலியுடன் நேரடியாக அல்லது பக்ஸ் இலக்கம் 692517 மூலம் விபரங்களைப் பதிவு செய்வதற்கான ஏற்பாடுகள் தற்போது செய்யப்பட்டுள்ளதாக ஜோசப் பரராஜசிங்கம் தெரிவித்துள்ளார்.

(உ-21)

# தபால்கள் அஞ்சலில்

யாழ்ப்பாணம், ஒக். 15

திருமலையிலிருந்து காங்கேசன்துறை நோக்கி நாளை வெள்ளி புறப்படும் செஞ்சிலுவைச்சர்வதேசக்குழுவின் கப்பல் மூலம் 56 தபாற் பொதிகள் யாழ். எடுத்துவரப்படவுள்ளன.

நேற்று முன்தினம் காங்கேசன்துறையிலிருந்து திருமலை நோக்கிப் புறப்பட்ட மேற்படி கப்பலில் குடாநாட்டின் பல்வேறு பகுதிகளிலிருந்தும் சேகரிக்கப்பட்ட—வெளியூர்த் தபால்கள் அடங்கிய— 16 தபாற் பொதிகள் திருமலைக்கு எடுத்துச் செல்லப்பட்டுள்ளன.

(உ-7)

# தப்பியோடிய படையினர் 2,106பேர் இதுவரைகைது!

கொழும்பு, ஒக். 15

இராணுவத்தில் இருந்து தப்பி ஓடியவர்களைக் கைது செய்வதற்குப் பொலிஸாரும், இராணுவத்தினரும் இணைந்து மேற்கொண்டு வரும் தேடுதல் நடவடிக்கையில் நேற்று முன்தினம் வரை இரண்டாயிரத்து 106 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டது.

தப்பியோடிய படையினரைக் கைது செய்யும் நடவடிக்கையைத் தீவிரப்படுத்தியுள்ள பொலிஸாரும், இராணுவத்தினரும் கிராம மட்டத்தில் அரச சார்பற்ற ஸ்தாபனங்களின் உதவியைப் பெற்று வருவதாக இராணுவப் பேச்சாளர் தெரிவித்தார்.

தப்பிஓடிய படையினருக்கு உதவியும ஒத்துழைப்பும் வழங்கும் பொதுமக்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்று அவர் தெரிவித்துள்ளார்.

கைதுசெய்யப்பட்ட படையினர் குறுகிய காலக் கட்டாயப் பயிற்சியின் பின்னர், இராணுவ நடவடிக்கைக்கு அனுபபப்படுவர் என்று பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

அதேநேரம் — குளியாப்பிட்டி பிரதேசத்தில் செவ்வாய் இராணுவத்தினர் மேற்கொண்ட சுற்றிவளைப்புத் தேடுதலில் மட்டும் 16 பேர் கைதாகினர் என்று இராணுவ வட்டாரங்கள் தெரிவித்தன.

(உ-3-21-ரீ)

# நேருக்குநேர் மோதிய மோ. சைக்கிள்கள்

தென்மராட்சி ஒக். 15

வேகமாக வந்த மோட்டார் சைக்கிள்கள் வீதியின் வளைவொன்றில் நேருக்கு நேர் மோதியதில் ஒருவர் கால் முறிந்த நிலையில் சாவகச்சேரி ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்ட சம்பவம் சாவகச்சேரி கல்லடி மூட்டுச் சந்தியில் இடம்பெற்றது.

மீசாலை வடக்கைச் சேர்ந்த கி. கிருஷ்ணமூர்த்தி (வயது 40) என்பவரே காயமடைந்த நிலையில் அனுமதிக்கப்பட்டு பின்னர் யாழ். போதனா வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டவராவார்.

(உ-117)

## கொம்பனித் தெருவில்

# 1லட்சம் டொலர் நோட்டு பொலிஸாரிடம், சிக்கியது

## யாழ்.வாசி உட்பட 3பேர்கைது

கொழும்பு கொம்பனித் தெருவில் ஒரு லட்சம் அமெரிக்க டொலர் நோட்டு ஒன்றை (சுமார் 60 லட்சம் ரூபா பெறுமதியுடையது) வைத்திருந்தது தொடர்பாக யாழ்ப்பாணத் தமிழர் உட்பட மூவரை பயங்கரவாதத் தடுப்புப் பொலிஸார் கைது செய்திருப்பதாக அறிவிக்கப்படுகின்றது.

வர்த்தகர்கள் போன்று வேடம் தரித்துச் சென்றே பொலிஸார் இவர்களைக் கைது செய்ததாகத் தெரிவிக்கப்பட்டது.

கைதானவர்களில் ஒருவர் தமிழர் என்பதால், அவருக்கு விடுதலைப் புலிகளுடன் தொடர்பு இருக்கின்றதா என்பது ஆராயப்படுவதாக பொலிஸ் உயரதிகாரி ஒருவர் சொன்னார்.

இந்த நோட்டு இந்தியாவிலிருந்து இலங்கைக்குக் கொண்டுவரப்பட்டிருக்கலாம் எனச் சந்தேகிக்கப்பட்டது.

உ-6

# நாவலர் தின பேச்சுப் போட்டி

வலிகாமம் தெற்கு, ஒக். 15

ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் குருபூசை சார்பான பேச்சுப் போட்டிகளை பாடசாலை மாணவர்களிடையே நடத்த யாழ்ப்பாணம் சைவ பரிபாலன சபையினர் தீர்மானித்துள்ளனர்.

இப் பேச்சுப்போட்டிகள் கீழ்ப் பிரிவு, மத்திய பிரிவு, மேற்பிரிவு ஆகிய மூன்று நிலைகளில் நடைபெறும்.

நவம்பர் மாதம் 15 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை நடைபெறவுள்ள இப்போட்டிகளுக்கான விண்ணப்பங்களை [illegible] திகதிக்கு முன் அனுப்பிவைக்குமாறு கேட்கப்பட்டுள்ளது.

(152)

## இளைஞர் மரணம்:

# இரண்டு சிப்பாய்கள் விளக்க மறியலில்

பளையில் இளம் குடும்பஸ்தர் ஒருவர் சுட்டுக் கொல்லப்பட்டதையடுத்து பளைப் பொலிஸாரால்கைதுசெய்யப்பட்ட இரண்டு சிப்பாய்கள் நேற்று முன்தினம் சாவகச்சேரி நீதிவான் நீதிமன்றில் முகத்தை கறுப்புத்துணியால் மூடிய நிலையில் ஆஜர் செய்யப்பட்டனர்.

நீதிவான் எஸ். ஏ. ஈ. ஏகநாதன் சந்தேக நபர்களை ஒக்ரோபர் 22ஆம் திகதி வரை விளக்க மறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார்.

சுகதபால பிரியந்த சபபதிஸாநாயக்க, ஜெயசுந்தர முதியான்சலாகே உதயசேனநாயக்க ஆகிய இருவருமே விளக்கமறியலில் வைக்கப்பட்டவர்களாவர்.

பிறிதொரு தினத்தில் அடையாள அணிவகுப்பு நடத்துவதற்கு வசதியாகவே முகத்தை மூடிய நிலையில் அவர்கள் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டதாகவும் தெரிவிக்கப் பட்டது.

# செய்தியாளர்கள் தேவை

உதயன் - சஞ்சீவி பத்திரிகைகளின் செய்தியாளர்களாகப் பணிபுரிவதற்குப் பின்வரும் பகுதிகளில் நிரந்தரமாக வசிப்போரிடம் இருந்து விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.

- ★ ஊர்காவற்றுறை
- ★ வேலணை
- ★ காரைநகர்
- ★ சங்கானை
- ★ கைதடி
- ★ கொக்குவில்
- ★ கோப்பாய்
- ★ புன்னாலைக்கட்டுவன்

விண்ணப்பதாரர்கள் க. பொ. த. ப. உயர்தரப் பரீட்சையில் மூன்று பாடங்களில் சித்தியடைந்தவர்களாகவும் தமிழில் சிறந்த தேர்ச்சி உடையவராகவும் இருத்தல் அவசியம். ஆங்கில அறிவுடையவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

21 வயதுக்கு மேற்பட்டவர்கள் மட்டும் தங்கள் வதிவிடக் கிராமசேவகரின் நற்சான்றிதழுடன் 24-10-98 ஆம் திகதிக்கு முன்னர் தமது முழுமையான சுயவிவரங்களுடன் விண்ணப்பிக்கவும்.

பிரதம ஆசிரியர்,
உதயன் - சஞ்சீவி,
361, கஸ்தூரியார வீதி,
யாழ்ப்பாணம்.

# முதலாம் ஆண்டு நினைவு அஞ்சலி



அமரர்

## அரியகுட்டி நாகரத்தினம்

(உரிமையாளர், குகன் ஸ்ருடியோ, பருத்தித்துறை)

தோற்றம்: 15 — 01 — 1917

மறைவு: 26 — 09 — 1997

திதி; 15—10—98

அன்புத் தந்தையே - எம்மை துன்பக் கடலில் ஆழ்த்திவிட்டு நீண்ட தூரம் சென்றனையோ இவ்வையகத்தை விட்டு.

தொண்டமானாறு செல்வச்சந்நிதி ஆலயத்தில் நடைபெறும் மோட்ச அர்ச்சனையிலும் சந்நிதியான் ஆச்சிரமத்தில் இடம்பெறும் மகேஸ்வர பூசையிலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

நா. குகனும் (கிளி)
குடும்பத்தினரும்.

குகன் ஸ்ருடியோ,
பருத்தித்துறை.

(சி/5129)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சின்னஞ்சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

நல்லநிலையிலுள்ள பாவனைக்குரிய சோக்கேஸ், மேசை, இரும்புக் குசன் கதிரைகள், சேதமடைந்த இரும்புப் பெட்டி விற்பனைக்கு உண்டு. வாங்க விரும்புவோர் தொடர்பு கொள்ளவும்: 77, சிவன் பண்ணை வீதி, கொக்குவில், யாழ்ப்பாணம். (59862)

எமது சங்கத்தில் வைக்கோல் உரப்பை 6500 உம், வெற்றுச் சாக்கு 1600 உம் விற்பனைக்குண்டு. தேவையானவர்கள் கீழ்க் காணும் விலாசத்தில் அலுவலக நேரத்தில் 20. 10. 98-க்கு முன் பார்வையிடலாம். பொதுமுகாமையாளர், யாழ். மாவட்ட அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம், கலாசாலை வீதி, திருநெல்வேலி. (சி/5165)

நல்லின ஜேர்சி கறவைப்பசு, இரண்டாம் ஈற்று பசுக் கன்றுடன் (12 நாள் வயது) விற்பனைக்கு உண்டு. தொடர்பு: இல. 14, குறோசற் ஒழுங்கை, கச்சேரி நல்லூர் வீதி, (கல்வித்திணைக்களத்தோருக்கு அண்மையில்) யாழ்ப்பாணம். (59904)

### தவறிவிட்டது

கோப்பாயைச் சேர்ந்த அழகேந்திரம் சிவனேஸ்வரி ஆகிய எனது தேசிய அ. அட்டை, விசேட அடையாள அட்டை, வேலை அடையாள அட்டைகளுடன் பேர்ஸ் பெருமாள் கோயில் உட்பகுதியில் தவறிவிட்டது. எடுத்தவர்கள் யாழ். ஆஸ்பத்திரி 24 ஆம் வார்ட்டில் ஒப்படைக்கவும். (59905)

காரைநகர் களபூமி விளானைச் சேர்ந்த கனகரத்தினம் தயாபரன் ஆகிய எனது தேசிய அடையாள அட்டை (752381445V), விசேட அடையாள அட்டை என்பன தவறிவிட்டது. எடுத்தவர்கள் இ. ச. பேரம்பலம் சகநிறுவனம், 50, 52, 54 கஸ்தூரியார் வீதி யாழ்ப்பாணத்தில் ஒப்படைக்கவும். (59907)

### காணி விற்பனைக்கு

மீசாலை வடக்குப் பகுதியில் கணபதிப்பிள்ளை புவனேஸ்வரி என்பவருக்குச் சொந்தமான கிணறு கட்டடங்களுடன் கூடிய 20 பரப்பு தென்னங்காணியும், கிணறு கட்டடங்களுடன் கூடிய 5 பரப்புக் காணியும் [இரு காணிகளும் அருகருகே அமைந்துள்ளன] விற்பனைக்குண்டு. தொடர்பு: த. வேலாயுதம், சட்டத்தரணி, புகையிரத நிலைய வீதி, சாவகச்சேரி. (C/5144)

யாழ். மாநகர எல்லைக்குள் வண்ணை மேற்கு முருகமூர்த்தி வீதியில் குடியிருப்புக்கேற்ப நன்றாகப் பராமரிக்கப்பட்ட நல்ல வருவாயுள்ள நன்னீர்க் கிணற்றுடன் கூடிய தென்னந் தோட்டம் விற்பனைக்குண்டு. தொடர்புகளுக்கு: பிரம் நடைமாடம், கூவாவடி, ஆனைக்கோட்டை. (59737)

### தேவை

விவாகப் பொருத்தம் பார்த்து உடனுக்குடன் கொடுக்கக் கூடிய அனுபவமுள்ள பெண் தேவை. நேரில் தொடர்பு கொள்ளவும். கு. திருவிளங்கம் மாங்கல்யா மல்ரி சேர்விஸ் 3 ஆம் கட்டை வாசிகசாலை ஒழுங்கை, கல்வியங்காடு. (59913)

### காணவில்லை

சிவப்புநிறப்பசுவும், கறுப்பு நிறக் கன்றும் 12-10-98 காலை 9 மணிமுதல் காணவில்லை. T. K. எனக் குறியிடப்பட்டுள்ளது. நெற்றியில் வெண்ணிறப் புள்ளியுண்டு. கண்டவர்கள் துரைராஜலிங்கம், இல. 50, இந்து மகளிர் கல்லூரி ஒழுங்கை, கந்தர்மடம் என்ற முகவரியுடன் தொடர்பு கொள்ளவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். (59924)

# கி. அ. சங்கம் அங்குரார்ப்பணம்

வண்ணார்பண்ணை வடகிழக்கு கிராம அலுவலர் பிரிவில் கிராம அபிவிருத்திச்சங்கம் ஒன்று அண்மையில் புதிதாக அங்குரார்ப்பணம் செய்யப்பட்டுள்ளது.

மேற்படி கிராம அலுவலர் பிரிவில் உள்ள சகல வகையான வளங்களையும் பயன்படுத்துவதே மேற்படி சங்கம் அமைக்கப்பட்டதன் பிரதான நோக்கம் எனத் தெரிவிக்கப்பட்டது. [7]

# தென்னங்கன்று விநியோகம்

ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபர் பிரிவு மக்கட்கு கிராம அலுவலர்கள் ஊடாக ஒரு தென்னங்கன்று இருபதுரூபா வீதம் வழங்கப்படுகின்றது.

மேலும் தென்னங்கன்றுகள் தருவித்து வழங்குவதற்கு ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபர் ஜே. எக்ஸ். செல்வநாயகம் ஏற்பாடு செய்துள்ளார். (-16)

## கண்ணீர் அஞ்சலி

எமது கல்லூரியின் மாணவ முதல்வன்
S. சாந்தரூபனின் அன்புச் சகோதரி

செல்வி
**சுகந்தினி ஸ்ரீஸ்கந்தராஜா**

அவர்களின் மறைவை யொட்டி துயருற்று இருக்கும் அன்னாரது குடும்பத்தக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதோடு அவரது ஆத்ம சாந்திக்காகவும் ஆண்டவனைப் பிரார்த்திக்கின்றோம்.

மாணவ முதல்வர் சபை
யாழ். மத்திய கல்லூரி.

(59937)

## வாழ்த்துகின்றோம்

இசையியலில் முது தத்துவமாணிப் பட்டத்தை
இலங்கையில் முதன்முதலாகப் பெற்ற
யாழ். பல்கலைக்கழக மூத்த விரிவுரையாளர்
**உயர்திரு. நா. வி. மு. நவரெத்தினம்**
அவர்களை அன்புடன் வாழ்த்துகின்றோம்.

காரை. வாரிவளவு நல்லியக்கச் சபையினர்

(59934)

## கண்ணீர் அஞ்சலி

முகாமைத்துவப் பிரிவைச் சேர்ந்த
எமது சகமாணவிகளான
ப. சரவணபவானி, ப. ஞானசுபாசினி
ஆகியோரின் அன்புத் தாயாரின்
மறைவையிட்டு எமது கண்ணீர்ப் பூக்களைக்
காணிக்கையாக்குகின்றோம்.

2ஆம் வருட
கலைப்பீட மாணவர்கள்.

யாழ். பல்கலைக்கழகம். (59931)

## 3 ஆம் ஆண்டு நினைவலைகள்
(15—10—98)

அமரர்
**ஆறுமுகம் இராசதுரை**
(இளைப்பாறிய தபால் உத்தியோகத்தர்
G. P. O. கொழும்பு: சுழிபுரம்.)

எங்களை வாழவைத்த அன்புத் தெய்வத்தின் ஆத்ம சாந்திக்காக இறைவனைப் பிரார்த்திக்கிறோம்.

ஆ. கிருஷ்ணமூர்த்தி
(சகோதரர்)
குடும்பத்தினர், உறவினர்கள்.

கல்லை வேம்படி,
சுழிபுரம்.

(59932)

# குளங்களைப் பார்வையிட விவசாயிகள் சுற்றுலா

வலிகாமம் தெற்கு ஒக். 15

உடுவில் கமநல சேவை கேந்திர நிலையத்துக்குட்பட்ட விவசாய சம்மேளனங்களைச் சேர்ந்த அங்கத்தவர்கள் அண்மையில் புனரமைப்பு செய்யப்பட்ட சிறிய நீர்ப்பாசன குளங்களையும் கால்வாய்களையும் நேரில் சென்று பார்வையிடும் சுற்றுலா ஒன்றினை மேற்கொள்ள உள்ளனர்.

எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை காலை இவர்கள் உடுவில் கமநலசேவை கேந்திர நிலையத்தில் இருந்து தமது சுற்றுலாவை ஆரம்பிக்க உள்ளனர்.

உடுவில், சங்குவேலி, மானிப்பாய், நவாலி, கந்தமலை, ஆனைக்கோட்டை, சண்டிலிப்பாய், அளவெட்டி, ஏழாலை, மாதகல், பண்டத்தரிப்பு போன்ற பல்வேறு கிராமங்களிலும் விவசாய சம்மேளனங்களின் ஒத்துழைப்புடன் மேற் கொள்ளப்பட்ட புனரமைப்புப் பணிகளை இவர்கள் சென்று பார்வையிடுவர்.

யாழ். மாவட்டத்தில் முன்னொரு போதும் இல்லாதவாறு சுமார் 47 சிறிய நீர்ப்பாசனக் குளங்களும், 12 சிறிய விவசாய வீதிகளும் மிக அழகாக ஆழமாக்கப்பட்டு, வரம்பு கட்டப்பட்டு புனரமைப்பு செய்யப்பட்டுள்ளன.

கடந்த ஜூலை மாதத்தில் யாழ். மாவட்ட கமத்தொழில் திணைக்களத்தினர் உலக உணவு ஸ்தாபனத்தின் அனுசரணையுடன் இப் புனரமைப்புப் பணிகளை ஆரம்பித்தனர்.

ஒவ்வொரு கிராமத்திலும் உள்ள விவசாய சம்மேளனங்களிடமும் வேலைகள் ஒப்படைக்கப்பட்டு மூன்று மாத கால வேளையில் புனரமைப்பு வேலைகள் பூர்த்தியாக்கப்பட்டுள்ளன.

ஞாயிற்றுக்கிழமை காலை, விவசாய சம்மேளனங்களின் தலைவர் செ. இலகுநாதன் தலைமையில் மேற்கொள்ள இருக்கும் இச்சுற்றுலாவில் யாழ். மாவட்ட கமத்தொழில் சேவைகள் ஆணையாளர் க. சுந்தரேசன், தொழில்நுட்ப உதவியாளர் திரு. ஆனந்தராசா, உடுவில் கமநல சேவைகள் கேந்திர நிலைய பெரும்பாக உத்தியோகத்தர் பொ. குகநாதன், உடுவில் பிரதேச செயலக திட்டமிடல் பிரதிப் பணிப்பாளர் த. தேவராஜன் உட்பட பல அதிகாரிகளும் விவசாய சம்மேளனங்களைச் சேர்ந்த பிரதிநிதிகளும் பங்கு கொள்கின்றனர். (ஐ-152)

# வாகனப் பதிவுக்கான விண்ணப்பங்கள் தேக்கம்

கொழும்பு, ஒக். 15

புதிதாக வாகனங்களைப் பதிவு செய்தல் மற்றும் உரிமை மாற்றுதல் தொடர்பான சுமார் ஒருலட்சத்து 30 ஆயிரம் விண்ணப்பங்கள் மோட்டார் போக்குவரத்து ஆணையாளர் திணைக்களத்தில் குவிந்து கிடப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

ஊழியர் பற்றாக்குறை காரணமாகவே இவ்வளவு தொகையான விண்ணப்பங்கள் குவிந்துள்ளன என போக்குவரத்து அமைச்சு தெரிவித்துள்ளது.

இவற்றை விட சுமார் 20 ஆயிரம் சாரதி அனுமதிப் பத்திரங்களுக்கான விண்ணப்பங்களும் அங்கு தேங்கிக் கிடப்பதாக தெரிவிக்கப்படுகிறது.

இந்த வேலைகளை உடனடியாகக் கவனிப்பதற்காக சுமார் 100 தற்காலிக ஊழியர்கள் அமைச்சரவையின் அனுமதியைப் பெற்று நியமிக்கப்பட்டுள்ளனர். ஓராண்டுக்குள் இந்தப்பணி முடிவடையும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

தற்போது கைவசமுள்ள இந்த விண்ணப்பங்கள் தொடர்பான வேலைகள் முடிவடைந்ததும் புதிதாகக் கிடைக்கும் விண்ணப்பங்கள் தொடர்பான பணிகளை சுமார் 4 வாரங்களுக்குள் செய்து முடிக்கலாம் என எதிர்பார்க்கப்படுகிறது. (ஐ-10)

## வாராந்த நிகழ்வு

கொழும்புத்துறை, ஒக். 15

தொண்டமானாறு சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவையின் ஆதரவில் தொண்டமானாறு அருள்மிகு ஸ்ரீ செல்வச் சந்நிதி முருகன் ஆலய சுற்றாடலில் அமைந்திருக்கும் சந்நிதியான் ஆச்சிரம மண்டபத்தில் நடைபெறும் வாராந்த நிகழ்வில் நாளை வெள்ளிக்கிழமை பிற்பகல் 10 30 மணிக்கு 'ஜெயம் தருவான் ஜெயகிருஷ்ணன்' என்ற தலைப்பில் வல்வெட்டித்துறை இந்து தமிழ்க் கலவன் பாடசாலை ஆசிரியர் 'சித்தாந்த சாகரம்' அழகு ஜெகதீஸ்வரதேசிகர் உரை நிகழ்த்துவார்.

பேரவையின் தலைவர் கு. திருப்பரங்கிரிநாதன் தலைமையில் இந் நிகழ்வு இடம் பெறும்.

இந்நிகழ்விற்கான அறிமுக உரையை இளைப்பாறிய வங்கி முகாமையாளர் சி. செ. சோமசுந்தரம் நிகழ்த்துவார். (ஐ-30-173)

**பண்டத்தரிப்பு பரிஷ் ப. நோ. கூ. சங்கம்**

## பயிலுநர் பாண் சுடுநர் தேவை

விண்ணப்பங்களை 28 - 10 - 98 ஆந் திகதிக்கு முன்னர் நேரிலோ, தபால் மூலமோ, பொதுமுகாமையாளர், பண்டத்தரிப்பு பரிஷ் ப. நோ. கூ. சங்கம், பண்டத்தரிப்பு, என்ற முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

பொது முகாமையாளர்
பண்டத்தரிப்பு பரிஷ் ப. நோ. கூ. சங்கம்

பண்டத்தரிப்பு. (சி-5185)

உ

## சனீஸ்வர ஹோமம்

நிகழ்வு 17-10-98 சனிக்கிழமை காலை 8. 00 மணி தொடக்கம் பிற்பகல் 11. 00 மணி வரை
**இணுவில் சிவன் கோயிலில் நடைபெறும்.**
தோஷமுள்ளவர்கள் பங்குபற்றலாம்.

(59933) தர்மகர்த்தா

# மூலவளங்கள் பற்றிய விவரம் சேகரிப்பு

நல்லூர்ப்பிரதேச செயலர் பிரிவில் உள்ள மூலவளங்கள் பற்றிய விவரங்கள் தற்போது திரட்டப்பட்டு வருகின்றன.

விவசாயம், போக்குவரத்து, கல்வி, சுயதொழில் தொடர்பான மூலவள விவரங்களே ஒவ்வொரு கிராம சேவகர் பிரிவு தோறும் திரட்டப்பட்டுவருவதாக பிரதேச செயலக உதவித் திட்டமிடல் பணிப்பாளர் அறிவித்துள்ளார். (ஐ-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்

## போக்குவரத்து வசதி

மனைவி, மக்கள் கொழும்பில். குடும்பத் தலைவர் இங்கே; அவசர அலுவலாகக் கொழும்பு சென்றவர் அங்கே. பெண்டு பிள்ளைகள் இங்கே; என்று அவஸ்தைப்படுபவர்கள் ஆயிரக் கணக்கானோர். பரீட்சைகள் நேர்முகப்பரீட்சைகள். என்று அவசர அலுவல்களின் நிமித்தம் பயணம் செய்யக் காத்திருப்போர் இன்னொரு சாரார்.

இவர்களில் முதலாவது சாரார் யாழ் – கொழும்பு விமானச் சேவையை நம்பி இங்கிருந்து அங்கும் அங்கிருந்து இங்கும் பயணம் செய்தவர்கள். விமானச் சேவை தடைப்பட்டு இரண்டு வாரங்கள் கழிந்தும் தமது வசிப்பிடங்களுக்குச் செல்ல முடியுமா என்ற ஏக்கத்துடனும் ஆதங்கத்துடனும் நாள்களை நகர்த்துகிறார்கள்!

இவர்களுக்கான போக்குவரத்து ஏற்பாட்டைச் செய்து கொடுக்க வேண்டிய பொறுப்பு அரசாங்கத்தினுடையதே. அந்த வகையில், பயணம் செய்ய முடியாமல் வந்த, சென்ற இடங்களில் அகப்பட்டுக் கொண்டவர்களுக்கு உதவும் நோக்குடன் யாழ். அரச அதிபர் மேற்கொண்ட முயற்சி பலனளிக்காமற் போயிற்று.

காப்புறுதி இல்லாத காரணத்தால் 'வாதுவ' கப்பலில் பயணிகளை ஏற்றிச் செல்ல முடியாது என்ற செய்தி. பாதிப்புற்றவர்களை மேலும் ஏமாற்றத்துக்கு ஆளாக்கி விட்டது.

'லங்கா முடித' கப்பலில் அடுத்த வாரம் பயணம் செய்யலாம் என்ற அவர்களின் நம்பிக்கையும் வீணடிக்கப்படாமல் பார்த்துக் கொள்ள வேண்டும். யாழ். சிவில் நிர்வாக அலுவலகமும் அரச செயலகமும் இது விடயத்தில் கவனம் செலுத்த வேண்டும் மேலும் தாமதம் உண்டாவதற்கான காரணங்கள் எதுவும் புதிதாகக் கிளம்புவதற்கு இடந்தரலாகாது.

மேலும். குடாநாட்டு மக்கள் வெளி மாவட்டங்களுக்குப் போக்குவரத்துச் செய்வதற்கு நிரந்தர கப்பற்சேவை அவசியம். தரை. வான் வழிப்போக்குவரத்துக்கள் தடைப்பட்டுள்ளதால் கடல் வழிப் பயண வசதி இன்றியமையாததாகும்.

காங்கேசன்- திருகோணமலை கப்பற் சேவையை நிரந்தரமாக நடத்துவதற்கான முன்னோடி முயற்சிகள் நடைபெற்று வருவதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன; நல்லது. முன்னரும் இத்தகைய முயற்சிகள் மேற்கொள்ளப்பட்ட போதிலும் அது கைகூடவில்லை என்பது அனுபவம்

1997 ஜூன் மாதத்தின் பின்னர் நிரந்தர கப்பற் சேவை வெறும் கனவாகவே இருந்து வருகிறது. இப்போதும் அவ்வாறின்றி, உரிய வழிமுறைகளை நேரகாலத்துடனேயே சரிவரக் கைக்கொண்டு, குடாநாட்டு மக்களுக்கு நிரந்தரமான கப்பற் போக்குவரத்துச் சேவையைச் செய்து கொடுக்க வேண்டும்.

நொண்டிக் குதிரைக்குச் சறுக்கியது சாட்டு என்று மக்கள் கருத இடமளிக்கக் கூடாது. குடாநாட்டு மக்கள் சிறைச்சாலைக்குள் வாழும் நிலையை நீக்குவதற்கு உருப்படியாகவும் அக்கறையுடனும் அரசு செயற்படட்டும்.

# விழிப்புலன் இழந்தோர் நலனுக்கும், வசதிக்கும்

# சமூகம் அக்கறையுடன் உழைக்க வேண்டும்

"அரிது அரிது மானிடராகப் பிறத்தல் அரிது; அதனினும் கூன். குருடு, செவிடு நீங்கிப் பிறத்தல் அதனினும் அரிது" என்பர். கருவில் அழிந்து விடுவதுமுண்டு, கருவுருவாகி இளமை கழிந்து, முதுமை கண்டு இறந்து விடுவது அரிய தொன்றாகும்.

1991 இல் இறப்பு வயது ஆண்கள் 69.5, பெண்கள் 74.2 ஆக உயர்ந்துள்ளது. அகவை 90 ஐக் கடப்பவர்கள் பலர் உண்டு. இதற்கிடையில் எத்துணைக் கடுமைகளைக் கடக்க வேண்டியுள்ளது.

கை, கால் இல்லாதவர்கள், கண்ணில்லாதவர்கள், இன்னும் அசாதாரண உறுப்புக்களைப் பிறப்பில் இருந்து பெற்று அதற்கு இசைவாக்கம் கண்டு வாழ்பவர்களும் உண்டு.

கை-கால் இல்லாதவர்களுக்கு ஜெய்ப்பூர் செயற்கைக் கை - கால்களைப் பொருத்துகின்றனர். இயல்பு, இயற்கை இல்லாவிட்டா

> **இன்று சர்வதேச வெள்ளைப் பிரம்பு தினம்**

லும் வாழ்க்கை நடைபெறுகின்றது. சிலருக்கு உறுப்புக் குறைபாடே வாழ்க்கையின் வளத்தைப் பெருக்கிட வசதியாக அமைந்தும் இருக்கின்றது. எனினும் இயற்கைக்கு ஈடாகுமா?

கண் இரண்டும் குருடான பிறகு சூரிய வணக்கமா? என்று கேட்பது வழக்கம். ஆனால் கண் இல்லாதவர்கள் பல்கலைக் கழகம் செல்வது மட்டுமல்ல அமைச்சர் பதவியைப் பெற்றும் அறிஞர்களாகவும் விளங்குகின்றார்கள்.

### பிரேல் எழுத்து

கண்பார்வை இழந்தவர்களால் பார்த்துப் படிக்க இயலாது. எனவே, அவர்கள் படிப்பதற்கு ஏற்றவாறு பல வகை எழுத்து முறைகள் வகுக்கப்பட்டுள்ளன. இவற்றுள் மிகச் சிறந்தது பிரேல் எழுத்து முறையாகும். இதனைக் கண்டு பிடித்தவர் லூயிஸ் பிரேல் (Louis Braille) என்னும் பிரெஞ்சுக்காரர் ஆவர்.

பிரேல் தமது மூன்றாம் வயதில் குருடரானார். பாரிசிலுள்ள குருடர் கல்வி நிலையத்தில் கல்விகற்று அங்கேயே ஆசிரியரானார். அந்த நிலையத்தில் சார்ள்ஸ் பார்பியர் (Charles Barbier) என்பவர் கண்டுபிடித்த முறையின்படி குருடர்களுக்குக் கல்வி கற்பித்து வந்தனர். அந்த முறையில் பல குறைகள் இருந்தன. பிரேல் அக் குறைகளை நீக்கி —திருத்தி— சீர்ப்படுத்தினார். அவர் பெயராலேயே அவர் சீர்ப்படுத்தி அமைத்த புதிய முறைக்கு அவர் பெயராலேயே பெயரும் ஏற்பட்டது. இப்போது எல்லா நாடுகளிலும் பிரேல் முறையே பின்பற்றப்படுகிறது.

**அ. பொ. செல்லையா**

*செயலாளர், லயன்ஸ் கழகம், சாவகச்சேரி.*

நமது தமிழரிடையேயும் விழிப்புலனற்றோர்கள் உள்ளனர். அவர்களும் பிறேல் எழுத்து முறையையே பின்பற்றுகின்றனர். விழிப்புலனற்றோர் விழி பெறத் தமிழர்கள் அறிவியல் விழிப்புணர்வு கொள்ள வேண்டும். அறிவியல் சாதனங்கள் பலவற்றைத் தமிழர்கள் கண்டு பிடித்து உலகின் வழிகாட்டிகளாக மிளிர வேண்டும்.

### கற்கும் முறை

விழிப்புலன் இல்லாதவர்களால் பார்க்க முடியாது. கைவிரல்களால் தடவி மேடு பள்ளங்களை உணர்ந்து கொள்ள முடியும். எனவே ஓரளவு தடித்த காகிதத்தில் குடர்கள் தடவிப் படித்திட எழுத்துக்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன. அதற்காகக் காகிதத்தில் இரண்டிரண்டாக மூன்று வரிசையில் ஆறு குமிழ்களை அமைக்கின்றனர். இக் குமிழ்களைப் பலவிதமாக அமைத்துக் கையால் தடவி எழுத்துக்களைக் கற்றுக் கொள்ளலாம்.

இம் முறையைக் கொண்டு அவர்கள் படிக்கவும், எழுதவும், கணக்குகள் போடவும் கற்றுக் கொள்கிறார்கள். பிரேல் முறையில் புத்தகங்களைத் தயாரிப்பதற்குரிய தட்டெழுத்துப் பொறிகளும் அச்சு இயந்திரங்களும் உள்ளன இவற்றின் உதவியால் இன்று விழிப்புலனற்றோர் (?) நூல்களும், நாளிதழ்களும், சஞ்சிகைகளும் வெளியிடப்படுகின்றன.

விழிப்புலனற்றோருக்குச் சிறப்பு முறையில் தயாரிக்கப்பட்ட மின்சூழ் (Torch Light), நேரம் பார்க்கக் கைக்கடிகாரம், போக்கு வரத்துக்கு வெள்ளைப் பிரம்பு போன்றன உண்டு.

குருடர்களுக்கு ஞாபகசக்தி அதிகம். பழக்கத்தில் இருந்தவர்கள் நீண்ட காலத்திற்குப் பின்னரும் குரலில் இனங்காணும் சக்தி குருடர்களுக்கு உண்டு.

### வெள்ளைப் பிரம்பு

கண் பார்வையற்றவர்களால் பயன்படுத்தப்படும் ஒரு வெள்ளைத்தடியே வெள்ளைப் பிரம்பாகும். இது பிளாஸ்ரிக்கினால் செய்யப்பட்ட நான்கு சம துண்டுகளைக் கொண்ட ஒரு மீற்றர் நீளமுடையதாகும். இரு நுனிகளிலும் உலோகப் பொருளினால் செய்யப்பட்ட மூடியுண்டு. தெருவில் தட்டும் பொழுது அதனால் சத்தம் கேட்கும். போக்குவரத்தில் விழிப்புலனற்றோருக்கு வெள்ளைப்பிரம்பு ஓர் அடையாளச் சின்னமாகவும், உதவியாளனாகவும் பயன்படுகின்றது.

தனது வாகனத்தில் மோதுப்படப் பார்த்த கண் பார்வையற்ற ஒருவரைக் காப்பாற்ற கோடீஸ்வரர் ஒருவரின் சிந்தையில் எழுந்த எண்ணமே வெள்ளைப் பிரம்பாகும்.

1925 இல் ஹெலன் கெல்லர் (Hellen keller) எழுப்பியகுரல். சர்வதேச ஒப்பந்த Ceda Point, Ohio மாநாட்டில் கொடுத்த சவால் இன்று உலகம் முழுவதும் விழியில்லாதவர்களை ஓரளவு விழி பெற வைத்துள்ளது.

1969 ஆம் ஆண்டு இலங்கையில் நடத்தப்பட்ட சர்வதேச விழிப்புணர்வற்றோர் மாநாட்டில் ஒக்ரோபர் 15 ஆம் திகதி வெள்ளைப் பிரம்பு தினமாகப் பிரகடனம் செய்யப்பட்டது.

### அவர்களை நேசியுங்கள்

பார்வை அற்றவர்களும் மனித சீவன்களே. அவர்களில் ஒருவர் எமது உறவினராக இருக்கலாம். எனவே அவர்களை உடன் பிறப்புகளாக நேசிக்க வேண்டும். சம வாய்ப்புக்களை வழங்க வேண்டும். அவர்கள் கேட்க வேண்டுமென இருக்கக் கூடாது. காலத்தால் செய்த உதவி ஞாலத்திலும் பெரியதாகும். உதவி கேட்டுத்தான் செய்ய வேண்டும் என்பதல்ல.

ஒக்ரோபர் 15- இன் நோக்கம் கொண்டாட்ட மல்ல, கேளிக்கையுமல்ல! விளம்பரமும் அல்ல!! வெள்ளைப் பிரம்பின் நோக்கத்தை அதனை அறிந்தவர்களுக்கு அறியத்தருவதற்காகவே அவர்களுக்கு ஓர் ஊர்வலம்.

பார்வையற்றவர் ஒருவர் ஐக்கிய இராச்சியத்தின் அமைச்சராக அமர்ந்துள்ளார்.

எமது பிரதேசத்திலும் வடக்கு - கிழக்கு மாகாண புனர்வாழ்வு அமைச்சில் உதவிச் செயலாளராக (SLAS நிர்வாக சேவையின் தரத்தில்) தெல்லிப்பழை, கொல்லங்கலட்டியைச் சேர்ந்த செல்வமாணிக்கம் பிரபாகரன் என்பவர் இருந்துள்ளார்.

இன்னும் பலர் இடைக்காலத்தில் பார்வை இழந்தவர்கள் உயர் நிலையில் இருக்கின்றனர். அரும்பசிட்டி சட்டத்தரணி திரு. மகாதேவா அவர்களுக்குப் பார்வையில்லை. வைத்திய கலாநிதி சம்பந்தர் அவர்கள் பல ஆண்டுகள் பார்வையற்று இருந்துள்ளார்.

பிரபல ஆங்கிலக் கவிஞன் ஜோன் மில்ரன் ஒரு குருடர். மகா பாரதத்தில் துரியோதனனின் தந்தை திருதராட்டினன் பார்வையற்றவர்.

### பட்டதாரிகளுமுளர்

யாழ்ப்பாணத்தில் இதுவரை ஐந்துக்கும் மேற்பட்ட பட்டதாரிகள் உள்ளனர். சுமார் 15 மாணவர்கள் பல்கலைக்கழகத்தில் படித்துக் கொண்டிருக்கின்றனர். கண் உள்ளவர்களைவிட பார்வை இல்லாத இவர்கள் கல்வியில் அதிக புள்ளிகளைப் பெறுகின்றனர். கவனக் கலைப்பான்கள் கண்ணற்றவர்களுக்குக் குறைவாக இருப்பதால் கல்வியில் மட்டுமல்ல வேறு துறைகளிலும் குறிப்பாக இசைத்துறையில் அவர்கள் சிறந்து விளங்குகிறார்கள்.

இவர்களின் வரலாறு பரிதாபகரமானது. பணமும், பதவியும் உள்ள இடங்களில் பரவாயில்லை என்றாலும், ஏழை. எளிமை உள்ள இடங்களில் விழிப்புலனற்றோர் நிலை கொடுமையிலும் கொடுமை.

படிக்கச் சந்தர்ப்பம் இல்லை வசதிகள் இல்லை. குருடன் படிக்க முடியுமா என்ற மூட நம்பிக்கை!

### இரங்குங்கள் ஆதரியுங்கள்

விழியற்ற தமிழருக்கு ஆதரவு தரும் பாடசாலைகள் இரண்டு. கைதடி நவீல்ட் பாடசாலை ஒன்று. மட்டக்களப்பில் தரிசனம் விழிப்புலனற்றோர் நிலையம் மற்றையது. சமூகத்துடன் இணைந்து வாழ்ந்திட பார்வை அற்றோருக்கான நிலையம் ஒன்று தேவை. அது. இவர்களின் இளமை, முதுமை, நினைப்பு, படிப்பு, பதவி, திருமணம் போன்ற செயற்பாடுகளில் கவனம் எடுப்பதாக அமைய வேண்டும். விழிப்புலன் இழந்தோர் விடுதி ஒன்று வாழ்வகம்— மானிப்பாயில் இயங்குகிறது. அதனைப் போன்று இன்னும் சில வேண்டும்.

கண் இல்லாதவர் மலையின் அழகை, அருவியின் சிதறலை, வானவில்லின் கவர்ச்சியை, இரவு - பகல் வேறுபாட்டை, அண்மை — சேய்மையின் வித்தியாசத்தை உணர முடியுமா? இன்னோரன்ன பல.

நாம் கொடுத்து வைத்தவர்கள். புலன் இழந்தவர்களுக்கு இரங்க வேண்டும். நொந்த மனத்தினை மகிழ்ச்சி பெறச் செய்ய வேண்டும்.

கண் பார்வையற்றவர்கள்

[11 ஆம் பக்கம் பார்க்க]

## சாயி சிந்தனை

ஒரு சமயம் இரு சகோதரர்கள் சேர்ந்து வாழ்ந்தார்கள்: ஒருவன் கஞ்சன், மற்றவன் இன்னும் பெரிய கஞ்சன். அளவற்ற கஞ்சத்தனம் காரணமாக அவர்களிடம் இருந்த எதையும் அவர்கள் அனுபவிக்கவே இல்லை. பக்கத்திலுள்ள கிராமத்தில் வயது முதிர்ந்த ஒருவர் காலமானதாகக் கேள்விப்பட்டார்கள். மூத்த சகோதரன் கட்டாயம் அங்கு செல்ல வேண்டி இருந்தது. பஸ் செலவு செய்ய அவனுக்கு விருப்பமில்லை. ஆகவே அவன் நடந்து சென்றான். சீக்கிரம் எழுந்திருந்து விளக்கை ஏற்றி வைத்து. பயணத்தைத் தொடர்ந்தான். இளைய சகோதரன் அவன் ஏற்றிய விளக்கை அணைத்தான்; எண்ணெயைச் செலவழிக்க அவனுக்கு விருப்பமில்லை. விளக்கை கையால் அணைத்த போது, ஒரு தேள் அவனைக் கொட்டியது. அவன் வலியால் துடித்தான். அரை மணி நேரத்திற்குப் பின். வாயிற் கதவு தட்டும் சப்தம் கேட்டது. பெரிய கஞ்சன் வெளியே நிற்பதைக் கண்டான். தம்பி கேட்டான், "அண்ணா அந்த இடத்துக்குச் சென்றீரா?" இல்லை, விளக்கை அணைத்து விட்டாயா இல்லையா என்பதைத் தெரிந்து கொள்ளத் திரும்பி வந்தேன். "என்ன அண்ணா இது? என்ன செய்து விட்டீர்கள்? போய் விட்டுத் திரும்புகிறீர்களே? செருப்பு எவ்வளவு தேய்ந்திருக்கும்?" பேராசையும், கருமித்தனமும் உள்ள இடத்தில் மகிழ்ச்சியே இராது.

ஆதாரம்:
சாயி அருளமுதம், ஒக்ரோபர் 1997

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நாளை

புரட்டாதி 30

வெள்ளிக்கிழமை

திதி: ஏகாதசி

முற்பகல்: 09. 41 வரை;

நட்சத்திரம்: மகம்

பிற்பகல் 03.17 வரை;

சுபநேரம்: 06 02 - 07.32

ராகுகாலம்; 10 32 - 12 02

(பகலுக்கும் இரவுக்கும்) பழைய நேரப்படி)

## உதயவாக்கு

உண்மையை மிதித்தால் அது உடனே வாளாக மாறிவிடும்.

- ஹென்றி ஜார்ஜ்

# போர் முனையில் படைவீரர்களை
# நேரில் சந்திப்பதே எனது விருப்பம்

## அ. புரத்தில் ஜனாதிபதி தெரிவிப்பு

கொழும்பு, ஒக். 15

'வெற்றி உறுதி' இராணுவ நடவடிக்கை மேற்கொள்ளப்படும் பகுதிகளுக்குச் சென்று உயிரைத் துச்சமெனக் கருதிப் போராடும் படைவீரர்களை நேரில் சந்திப்பதே தனது பேராசையாக உள்ளது எனவும் ஆனால் பாதுகாப்புக் காரணங்களால் படை அதிகாரிகள் இதனை அனுமதிக்கவில்லை எனவும் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க கடந்ததிங்களன்று அனுராதபுரத்திலுள்ள இராணுவத் தலைமையகத்தில் தெரிவித்தார்.

'வெற்றி உறுதி' இராணுவ நடவடிக்கையில் பங்குபற்றும் மூத்த மற்றும் இளைய இராணுவ அதிகாரிகளை ஜனாதிபதி அனுராதபுரத்தில் சந்தித்தார். சுமார் 4 மணித்தியாலங்கள் படை அதிகாரிகளுடன் உரையாடினார் எனத் தெரியவருகிறது.

இந்த இராணுவ நடவடிக்கையில் ஈடுபட்டுள்ள படையதிகாரிகளின் குறைகள் மற்றும் தேவைகள் குறித்து விசாரித்த ஜனாதிபதி அவை குறித்து உடன் ஆவன செய்யுமாறு கட்டளை பிறப்பித்தார்.

இந்த மகாநாட்டில் பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் ஜெனரல் அனுருத்த ரத்வத்த, ஜனாதிபதியின் செயலர் கே. பாலபட்டபெண்டி, பாதுகாப்புச் செயலர் சந்திரானந்தடி. சில்வா, இராணுவத் தளபதி, கடற்படைத் தளபதி, விமானப் படைத் தளபதி, 53 ஆவது படைப்பிரிவின் கட்டளை அதிகாரி மேஜர் ஜெனரல் நீல் டயஸ், 55 ஆவது படைப் பிரிவின் கட்டளை அதிகாரி மேஜர் ஜெனரல் சரத் பொன்சேகா மற்றும் 56 ஆவது படைப்பிரிவின் கட்டளை அதிகாரி பிரிகேடியர் சுசில் சந்திரபால ஆகியோர் கலந்து கொண்டதாக 'லங்காதீப' பத்திரிகை செய்தி வெளியிட்டிருக்கிறது.

(ஐ-10)

## பருத்தித்துறை - யாழ். பஸ்சேவை சீரில்லை

### பயணிகள் தெரிவிப்பு

வடமராட்சி, ஒக். 15

பருத்தித்துறை - யாழ்ப்பாணம் இ. போ. ச பஸ் சேவை குறிப்பிட்ட நேரங்களில் சீரின்மையால் பயணிகள் பலத்த சிரமங்களை அனுபவித்து வருகின்றனர்.

வட பிராந்திய போக்குவரத்துச் சபையின் பருத்தித்துறை டிப்போ காலையிலும் பிற்பகலிலும் ஓரளவு பஸ் சேவைகளை நடத்தி வருகிறபோதிலும் நண்பகலுக்குச் சில மணி நேரம் முன்னதாகவும் பின்னதாகவும் பஸ் சேவைகள் சீரின்றி உள்ளன.

வடமராட்சிப் பகுதியிலிருந்து யாழ் போதனா வைத்தியசாலைக்கு நோயாளர்களைப் பார்வையிடவும், வேறு அன்றாட அலுவல்களுக்காகவும் யாழ்ப்பாணம் செல்ல வேண்டிய பயணிகள் பஸ் சேவை சீரின்மையால் நீண்ட நேரம் காத்திருக்க வேண்டி உள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (ஐ-173-15)

## மாறனின் மறைவு கழகத்துக்கு பேரிழப்பு

### கிருபைராஜா அஞ்சலி

யாழ்ப்பாணம், ஒக். 15

எமது அமைப்பின் ஸ்தாபக உறுப்பினர்களில் ஒருவரான மாறனின் இழப்பு எமது கழகத்துக்கு மட்டுமல்ல உரிமைக்காகப் போராடும் மக்களுக்கும் ஈடுசெய்ய முடியாத பேரிழப்பு ஆகும்.

'புளொட்' அமைப்பின் யாழ். மாவட்ட அமைப்பாளர் செ. கிருபைராஜா மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

மாறனின் மறைவு குறித்து விடுத்துள்ள செய்தியில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

சிந்தனைத் தெளிவும் மதிநுட்பமும் நிறைந்த தளபதியின் வழிகாட்டலில் வளர்ந்த தோழர் மாறன் இனக் கலவரங்களினால் பாதிக்கப்பட்டு இடம்பெயர்ந்து எமது தாயகப் பிரதேசத்தை நோக்கி வந்த மலையக மக்களை எல்லைப் பிரதேசங்களில் குடியமர்த்தி மறுவாழ்வு அளிக்கும் நோக்குடனும் எமது எல்லைப் பிரதேசங்களைப் பாதுகாக்கும் கழகத்தின் திட்டத்திற்கமைய உருவாக்கப்பட்ட காந்தீயம், ஏதிலிகள் புனர்வாழ்வுக்கழகம் போன்றவற்றுக்கு ஊடாக உறுதியாக உழைத்தவர்.

ஆயுதப்போராட்டம் கூர்மையடைந்த வேளையில் போர்ப் பயிற்சிகள் பெற்று விடுதலைப் போராட்டத்தில் முதல் வெற்றி கண்ட ஆனைக் கோட்டைப் பொலீஸ் நிலையத் தாக்குதலில் பங்குபற்றியவர்.

தோழர் மாறன் தமிழ் மக்களின் உரிமைக்கான போராட்டத்தின் நியாயத்தைச் சிங்கள மக்களுக்கும், தென்னிலங்கை முற்போக்குச் சக்திகளுக்கும் எடுத்துக்கூறி எமது போராட்டத்துக்கு ஆதரவு தேடும் முயற்சிகளிலும் ஈடுபட்டவர். உரிமைப்போருக்கு உரமூட்டிச் சென்ற தோழர் மாறனுக்கு எமது கண்ணீர்த் துளிகளைக் காணிக்கையாக்குகிறோம்—என்று தெரிவித்துள்ளார். (ஐ-5)

## ஆசிரியர் சம்பளம்

பருத்தித்துறை ஒக். 15

யாழ். மாவட்டத்தில் கடமையாற்றும் ஆசிரியர்கள், அதிபர்கள், கல்விசார் உத்தியோகத்தர்கள், ஊழியர்களுக்கு இம்மாதத்திற்கான சம்பளமும் இதுவரை இருந்து வந்த நடைமுறையின் படி அந்தந்தக் கல்விக்கோட்டங்கள் மூலமாகவே வழங்கப்படவுள்ளன.

அடுத்த மாதம் முதல் இவர்களுக்கான சம்பளங்கள் புதிய வலயக் கல்விப் பணிமனைகள் மூலமாக வழங்கப்படும் என கல்வித் திணைக்கள கணக்காளர் தெரிவித்துள்ளார்.

இம்மாதத்துக்குரிய சம்பளம் அடுத்தவார முற்பகுதியில் வழங்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

(ஐ-118)

## குடத்தனையில் இளைஞர் கைது

வடமராட்சி, ஒக். 15

குடத்தனைப் பகுதியில் கடந்த 7 ஆம் திகதி இடம்பெற்ற படையினரின் சுற்றிவளைப்பின் போது இளைஞர் ஒருவர் கைது செய்யப்பட்டார்.

குடத்தனை கிழக்கைச் சேர்ந்த கிருஷ்ணதாஸ் மதனகாந்தன் (20 வயது) என்பவரே கைது செய்யப்பட்டவராவார்.

இது குறித்து கைதான இளைஞரின் தந்தையாரான திருஞானசம்பந்தமூர்த்தி கிருஷ்ணதாஸ் பருத்தித் [illegible] உள்ளார்.

(ஐ-17?)


# WANTED HOUSE

A House is required for rent with Water supply, Electricity, Western bathroom, Seperate well & Boundary wall within Jaffna Municipal Limits for Expatriate.

A small lawn & Garden preferred.

Please Reply to:

Project Manager,
FORUT, 67, Temple Road,
Jaffna.

(59942)



# SALE

## மாபெரும் மலிவு விற்பனை

மலரும் தீபாவளிப் பண்டிகையை முன்னிட்டு
இன்று 15-10-98 முதல் 19-10-98 வரை
வாடிக்கையாளர்களின் நலன்கருதி சகலவித ஜவுளித் தினுசுகளும் 10% — 20% கழிவுடன் மலிவு விற்பனை செய்யப்படும் என்பதை அன்புடன் அறியத் தருகின்றோம்,

**ஸ்ரீரங்கன் ஆடை அகம்**

பலாலி வீதி, திருநெல்வேலிச் சந்தி,
திருநெல்வேலி. (59947)


# மரண அறிவித்தல்கள்

## வேலுப்பிள்ளை சின்னத்துரை

(ஓய்வு பெற்ற அதிபர்)

விநாயகர் வீதி அல்வாய் தெற்கைச் சேர்ந்த வேலுப்பிள்ளை சின்னத்துரை (ஓய்வுபெற்ற அதிபர், கற்கோவளம் மெதடிஸ்த மிசன் பாடசாலை, பருத்தித்துறை) கொழும்பில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற திரு. திருமதி க. வேலுப்பிள்ளையின் அன்பு மகனும், காலஞ்சென்ற டாக்டர் திரு. திருமதி V. S. முருகேசம்பிள்ளையின் மூத்த மருமகனும், மகேஸ்வரி தேவியின் அன்புக் கணவரும், பவளராணி, வசந்தமலர், ரதி (கனடா), ரவீந்திரகோன் (கனடா), ராதாக்கோன் (கனடா), இன்பம் (நோர்வே) ஆகியோரின் அன்புத் தந்தையும், அழகரட்ணம் (நெல்லியடி மத்திய மகாவித்தியாலயம், கரவெட்டி), இராசரட்ணம் (களஞ்சியப் பொறுப்பாளர், இ. போ. ச. வவுனியா), சிவஞானம் (லண்டன்), கலைவாணி (கனடா), அனசுயா (கனடா), திலக் (நோர்வே) ஆகியோரின் அன்பு மாமனாரும், மலரவன் (பல்கலைக்கழகம் கொழும்பு), மகிந்தா, விநோதா (சென். கிளையர்ஸ் மகளிர் வித்தியாலயம், வெள்ளவத்தை), மாலவன், சுதர்சன் (ம. ம. வி. வவுனியா), ஆதித்தன் (ம. ம. வி. வவுனியா), மீரா, ராதாராம், ராதை, வைஷ்ணவன், வைசாளினி, எழில், இனியவன் ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் பூதவுடல் 15-10-98 வியாழக்கிழமை பி. ப. 4 மணிக்கு வெள்ளவத்தை இல 27, விகாரை வீதி இல்லத்திலிருந்து எடுத்துச்செல்லப்பட்டு பொரளை கனத்தை மயானத்தில் தகனம் செய்யப்படும்.

தகவல்:
அ. பவளராணி,
(மகள்)

விநாயகர் வீதி,
அல்வாய் தெற்கு,
அல்வாய். (சி/5183)

## சோமசுந்தர ஐயர் பொன்னுத்துரை குருக்கள்

துன்னாலை வடக்கு கரவெட்டியைப் பிறப்பிடமாகக் கொண்ட பொன்னுத்துரை குருக்கள் 14-10-98 புதன்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று 15-10-98 வியாழக்கிழமை காலை 9.00 மணிக்கு நடைபெறும்.

தகவல்:
பொ. பேரானந்தசர்மா
பொ. சிறீதரக் குருக்கள்
(மக்கள்)

துன்னாலை வடக்கு,
கரவெட்டி. (59940)

## செல்வி சுகந்தினி ஸ்ரீஸ்கந்தராஜா

(க. பொ. த. [உ. த.] 97 வர்த்தகப்பிரிவு மாணவி, சுண்டுக்குளி மகளிர் கல்லூரி)

செல்வி சுகந்தினி ஸ்ரீஸ்கந்தராஜா 13-10-1998 (செவ்வாய்) அன்று கொழும்பில் காலமானார். அன்னார் அம்பலவாணர் ஸ்ரீஸ்கந்தராஜா, திருமதி பரமேஸ்வரி ஸ்ரீஸ்கந்தராஜா தம்பதிகளின் அன்பு மகளும், ஸ்ரீ. சாந்தரூபன் (உ. த. மாணவன், யாழ் மத்திய கல்லூரி), ஸ்ரீ ஞானதர்சினி, ஸ்ரீ. துஷ்யந்தினி (திருக்குடும்ப கன்னியர் மடம்) ஆகியோரின் அன்புச் சகோதரியுமாவார்.

இவரது தகனக் கிரியைகள் 14-10-1998 அன்று கொழும்பில் நடைபெற்றன. இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்;
ஸ்ரீ. சாந்தரூபன்
(சகோதரன்)

419, பிரதான வீதி,
கொழும்புத்துறை, யாழ்ப்பாணம். (59946)

## திருமதி திலகவதி செல்லத்துரை

தெல்லிப்பழையைப் பிறப்பிடமாகவும் கொக்குவிலை வசிப்பிடமாகவும் கொண்ட திலகவதி செல்லத்துரை 12-10-98 இல் சிவபதம் அடைந்துவிட்டார்.

அன்னார் செல்லத்துரையின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற மகேந்திரன், வசந்தலீலா, வதனி (R. D. D. Office வவுனியா), வனிதா, ஜெகந்திரன் (Well plan Engineer வவுனியா), வற்சலா (யாழ். பல்கலைக்கழக நுண்கலைப்பிரிவு 4 ஆம் வருடம்), காலஞ்சென்ற வர்ணலா, சுவீந்திரன் (யாழ். பல்கலைக்கழக கலைப்பீடம் 2 ஆம் வருடம்) ஆகியோரின் ஆசைமிகு தாயாரும், பரமேஸ்வரி, சண்முகலிங்கம், கணேஸ், பகவதி, திருநாவுக்கரசு, சிவஞானம், சுவர்ணரட்ணம், புனிதவதி ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்ற தங்கம்மா, காலஞ்சென்ற இரத்தினம், காலஞ்சென்ற பாலகிருஷ்ணர், காலஞ்சென்ற செல்லம், காலஞ்சென்ற நல்லம்மா, பாக்கியம், பகவதி ஆகியோரின் அன்பு மைத்துனியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 15-10-98 இன்று வியாழக்கிழமை காலை 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன்மணல் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

தகவல்:
மு. சிவஞானம்
[சகோதரன்]

சொர்ணவடலி லேன்,
கொக்குவில். [59949]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆண்டு நிறைவை முன்னிட்டு

# யாழ். பல்கலைக்கழக மருத்துவபீட நிகழ்வுகள்

யாழ்ப்பாணம், ஒக். 15

யாழ். பல்கலைக்கழக மருத்துவபீடம் தனது 20 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு திறந்த இல்ல வரவேற்பு நிகழ்வு ஒன்றை நடத்தவுள்ளது.

யாழ். மருத்துவபீடத்தின் செயற்பாடுகளை அனைவரும் அறிந்துகொள்வதற்கு வழிசெய்து கொடுக்கும்முகமாக அடுத்த மாதம் 7 ஆம் திகதி திறந்த இல்ல வரவேற்பு நிகழ்வு நடத்தப்பட உள்ளது.

மருத்துவபீடத்தில் கல்வி பயிலும் மாணவர்களின் செயற்பாடுகள்குறித்து அவர்களின் பெற்றோர்களும், ஏனைய மக்களும் அறிந்துகொள்ள வேண்டும் என்பதற்காகவும்—

மருத்துவபீடத்துக்கும் சமுதாயத்துக்குமிடையில் ஒரு நல்லுறவை ஏற்படுத்துவதற்காகவுமே—இந் நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

திறந்த இல்ல வரவேற்பு நிகழ்வின்போது மருத்துவ பீடத்தின் கல்வி, ஆய்வு, நோயாளர் கவனிப்புபோன்றவற்றையும், மருத்துவபீடத்தின் ஏனைய செயற்பாடுகள் அனைத்தையும் அனைவரும் நேரில் சென்று பார்வையிட முடியும்.

பிறநாடுகளில் வருடந்தோறும் நடைபெற்று வரும் இவ்வாறான நிகழ்வு யாழ். பல்கலைக்கழக மருத்துவ பீடத்தில் இம்முறை முதல் தடவையாக நடைபெறவுள்ளது. [இ-9-6]

## 163 பேருக்கு 5,000 ரூபா

சுன்னாகம், ஒக். 15

வலிகாமம் வடக்கு பிரதேச செயலர் பிரிவில் மேலும் 163 பேருக்கு ஐயாயிரம் ரூபா மீளக்குடியமர்தல் கொடுப்பனவு வழங்கப்படவுள்ளது.

இவர்களுக்கான காசோலைகள் வங்கிகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டு விட்டதாகவும் —

சம்பந்தப்பட்டோர் வங்கிகளில் பணத்தைப் பெற்றுக் கொள்ளலாம் எனவும் பிரதேச செயலகத்தினர் தெரிவித்தனர்.

இப்பகுதியில் 3 ஆயிரத்து 752 பேருக்கு இதுவரை மீள்க்குடியமர்தல் கொடுப்பனவு வழங்கப்பட்டுள்ளது. (ஐ-27)



பருத்தித்துறை, ஒக். 15

புலோலி பசுபதீஸ்வரர் ஆலயத்தில் சனீஸ்வரர், வியாழபகவான் விசேட ஹோம பூசைகள் எதிர்வரும் சனிக்கிழமை இடம்பெறவுள்ளன. சனி பகவானின் புரட்டாதிச் சனி இறுதித் தினத்தையொட்டி இவை இடம்பெறவுள்ளன. (ஐ-118)

# யாழ். பல்கலைக்கழக ஊழியர் தின விழா

யாழ்ப்பாணம், ஒக். 15

யாழ். பல்கலைக்கழக ஊழியர் தினவிழா நேற்று யாழ். பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் ஊழியர் சங்கத் தலைவர் சி. கனகராஜ் தலைமையில் நடைபெற்றது.

இவ்விழாவில் பிரதமவிருந்தினராக கலந்து கொண்ட துணைவேந்தர் பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை சிறப்பாக தொழிற்படும் கனிஷ்டா ஊழியர்கள் தெரிவு செய்யப்பட்டு அடுத்த ஆண்டு ஊழியர் தின விழாவில் பரிசு வழங்குவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது என்று தெரிவித்தார்.

இந்த விழாவில் பல்கலைக்கழக பதிவாளர் கு. குணராஜா, விஞ்ஞான பீடாதிபதி பேராசிரியர் வீ. ஆறு கணேசலிங்கம், கலைப் பீடாதிபதி அ. சண்முகதாஸ், மருத்துவ பீடாதிபதி வைத்திய கலாநிதி இ. இராஜேந்திரப் பிரசாத், விவசாய பீடாதிபதி எந்திரி இ. விஜயரட்ணம் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகக் கலந்து கொண்டு உரையாற்றினர்.

மரம் நடல் பெண்களுக்கான சங்கீதக் கதிரை, மெதுவான சைக்கிள் ஓட்டம், கயிறிழுத்தல், ஆண்களுக்கான தடை ஓட்டம், ஆகிய போட்டிகளில் வெற்றியீட்டியவர்களுக்கான பரிசளிப்பு வைபவமும், இராமநாதன் கல்லூரி மாணவிகளின் நடனம், நாடகம் விழாவில் பங்கு கொண்டோருக்கான பரிசுக் குலுக்கல், அருணாவின் இசை நிகழ்ச்சி என்பனவும் இடம்பெற்றன.

# சைவத் திருமுறை விழா

யாழ்ப்பாணம், ஒக். 15

சங்கானை கல்விக் கோட்டத்தின் சைவத் திருமுறை விழாவும் சைவ நெறித் தொண்டுபடு நிகழ்ச்சி பரிசளிப்பு வைபவமும் நாளை வெள்ளிக்கிழமை காலை 8. 30 மணி முதல் நடைபெற உள்ளன.

சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரியின் பிரதான மண்டபத்தில் சங்கானை கல்விக் கோட்ட பிரதிக் கல்விப் பணிப்பாளர் ஆ. வ. கணேசலிங்கம் தலைமையில்நடைபெற உள்ள இவ்வைபவத்தில் கலை நிகழ்ச்சிகள், பரிசில் வழங்கல், நூல் வெளியீடு என்பன இடம்பெற உள்ளன.

இவ்வைபவத்தில் விக்ரோறியாக் கல்லூரி அதிபர் கா. சந்திரபாலன் வரவேற்புரையையும்நல்லை ஞான சம்பந்தர் ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்தபரமாச்சார்யசுவாமிகள் ஆசியுரையையும் வழங்குவர்.

பருத்தித்துறை சாரதா சேவாச்சிரம சுவாமி சித்ரூபானந்தா வாழ்த்துரை வழங்குவார்.

மேலதிக அரச அதிபர் து. வைத்திலிங்கம், வடமராட்சி வலய கல்விப் பணிப்பாளர் சி. சிவராஜா, கலைப் பீடாதிபதி பேராசிரிய அ. சண்முகதாஸ், உடுவில் பிரதேச செயலர் ஆ. மகாலிங்கம், சங்கானை பிரதேச செயலர் கா. சந்திரராசா, தீவக வலய கல்விப் பணிப்பாளர் ப. விக்கினேஸ்வரன் யாழ். வலயம் இரண்டின் பிரதிக் கல்விப் பணிப்பாளர் சு. கணபதிப்பிள்ளை, உடுவில் கல்விக் கோட்ட பிரதிக் கல்விப் பணிப்பாளர் அ. தற்பரானந்தன் ஆகியோர் சிறப்புரையாற்றுவர்.

கொன்றைவேந்தன், நல்வழி, நன்னெறி, ஆத்திசூடி, மூதுரை ஆகிய ஔவையார் நீதி நூல்களின் ஆயிரம் பிரதிகள் வெளியிட்டு வைக்கப்படும். இவை இலவசமாக வழங்கப்பட உள்ளன.

சங்கானை கல்விக் கோட்டத்தினால் நடத்தப்பட்ட போட்டிகளில் பங்குபற்றிய சுமார் ஆயிரத்து 600 மாணவர்களுக்குப் பரிசில்களும் வழங்கப்பட உள்ளன.

## லயன்ஸ் பிராந்தியத் தலைவர் வருகை

வடமராட்சி, ஒக். 15

சர்வதேச லயன்ஸ்கழக மாவட்டம் 306 'பி' யின் பிராந்தியத்தலைவர் லயன் டாக்டர் எஸ். எஸ். அருளானந்தம், லயன் சீமாட்டி சிவயோகம் சகிதம் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை யாழ்ப்பாணம் லயன்ஸ்கழகத்துக்கு விஜயம் செய்யவுள்ளார்.

சுண்டுக்குளி சச்சமோட்டையில் யாழ் லயன்ஸ்கழகம் நடத்தும் வைபவத்தில் "அபிவிருத்திச் செய்முறையில் மனித நடத்தை மாற்றங்களும், அரசசார்பற்ற நிறுவனங்களும்" என்ற தலைப்பில் யாழ். பல்கலைக்கழக புவியியற்றுறைப் பதில் தலைவர் எஸ். பி. பி. இராஜேஸ்வரன் உரையாற்றவர். முதியோர்தின விழாவாகவும் கொண்டாடப்படவுள்ள இவ்வைபவத்தில் முதியோர் சிலர் கௌரவிக்கப்படுவதுடன் அவர்களுக்கு உடுபுடைவை, பாத்திரங்கள் என்பனவும் இலவச மூக்குக் கண்ணாடிகளும் வழங்கப்படும்.

பிராந்தியத் தலைவர் வருகையை ஒட்டி புதிய உறுப்பினர்களை இணைக்தல், கழக மாதாந்தப் பத்திரிகை வெளியீடல் போன்ற செயல் திட்டங்களும் இடம்பெறும். (ஐ-173)

## கலை விழா

சுன்னாகம், ஒக். 15

வலிகாமம் வடக்கு பிரதேச செயலகத்தால் கலைவிழா ஒன்று நடத்தப்படவுள்ளது. மூன்று நாள்கள் நடைபெறும் இக்கலைவிழா இன்று வியாழக்கிழமை பிற்பகல் 2. 30 மணிக்கு ஆரம்பமாகிறது.

மல்லாகம் பஸ்தரிப்பு மண்டபத்தில் நடைபெறும் இவ்விழாவில் பிரதேச கலைஞர்கள் பங்குகொள்ளும் பட்டிமன்றம், கவியரங்கம், நடன நிகழ்ச்சி, வில்லுப்பாட்டு, இசைக் கச்சேரி போன்றன இடம்பெறுமெனத் தெரிவிக்கப்பட்டது.

இப் பிரதேசத்தில் உள்ள கலைகளை வளர்ப்பதும், உள்ளூர்க் கலைஞர்களைக் கௌரவித்து, அவர்களை ஊக்குவிப்பதுமே இக் கலைவிழாவின் நோக்கமென பிரதேச செயலாளர் திருமதி ப. திலகநாயகம் போல் தெரிவித்தார். (ஐ 27)

## விழிப்புலன்...

(9 ஆம் பக்கத் தொடர்)

எம்மிடையேயும் உள்ளனர். லூயிஸ்பிரேல்போன்றோ அல்லது வேறோர் உருவத்திலோ விழிப்புலனற்றோர் வாழ வழிவகுத்தவர்கள் போன்று நாமும் செய்யக் கூடாதா? ஏன் செய்திட முயற்சிக்கவில்லை? எப்படிச் செய்யலாமென யோசிக்கிறீர்களா?

ஒருமுறை கைதடி நவீல்ட் பாடசாலைக்குச் செல்லுங்கள். வெள்ளைப்பிரம்பு தினத்தை அறியுங்கள். அதிற் கலந்து நல்லதை நாடுங்கள் கபோதிமேல் காதல் கொள்ளுங்கள்!

## திருத்தம்

நல்லூர் வடக்கு சந்திரசேகரப பிள்ளையார்கோயில் கட்டட நிதிக்காக நடத்தப்பட உள்ள ராகம்ஸ் இசைக் குழுவினரின் இசை நிகழ்ச்சி தொடர்பாக —

நேற்றைய உதயனின் இரண்டாம் பக்கத்தில் வெளியான விளம்பரத்தில்—

பிரசுர அன்பளிப்பு: [illegible] என்பதே சரியானதும் [illegible] எனத் தவறுதலாக அச்சாகிவிட்டது.

# நேர்முகப் பரீட்சைக்கு மேலும் மூவருக்கு அழைப்பு

யாழ்ப்பாணம், ஒக். 15

வடக்கு-கிழக்கு மாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் அமைச்சின் செயலாளரின் பணிப்பின் பேரில் மேலும் மூன்று பேர் தமிழ்மொழி மூல தகுதிகாண் ஆசிரியர் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்டுள்ளனர்.

மே. நி. அர்ச்சுனா (வல்வை றோ. க. த. பாடசாலை), என். தவகுமாரி (சங்கத்தார் வயல் இயக்கச்சி), ஏ. மரிய நிற்றா (இந்திரபுரம், மூதூர்) ஆகியோரே இவ்வாறு நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்டவர்கள் ஆவர்.

சம்பந்தப் பட்டவர்களுக்கான நேர்முகப் பரீட்சை எதிர்வரும் 20 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 9 மணிக்கு யாழ்ப்பாணக் கல்வி வலயத்தில் நடைபெறும் எனவும் —

அத்தருணம் சகல ஆவணங்களுடனும் சமுகமளிக்க வேண்டுமெனவும்— யாழ்ப்பாணக் கல்வி வலைப் பணிப்பாளர் கலாநிதி ச. நா. தணிகாசலம் பிள்ளை கேட்டுள்ளார். (இ-7)

## மாறன் மறைவுக்கு

# ஈ.பி.ஆர்.எல்.எவ். அமைப்பு அனுதாபம் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஒக். 15

தமிழீழ மக்கள் விடுதலைக் கழகத்தின் ஆரம்ப கால உறுப்பினரும், தமிழீழ மக்களின் மீதான இன ஒடுக்குமுறைக்கெதிரான போராட்டத்தில் குறிப்பிடத் தகுந்த பங்களிப்பை வழங்கிய வருமான மார்க்கண்டு தேவதாஸ் (மாறன்) அவர்களின் அகால மரணத்தையிட்டு எமது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கின்றோம்" என்று ஈ. பி. ஆர். எல். எவ். அமைப்பு விடுத்துள்ள செய்தியில் தெரிவித்துள்ளது.

1980 களின் முற்பகுதியில் ஈழ விடுதலைப் போராட்டத்தில் தன்னை இணைத்துக் கொண்ட மாறன் பேரினவாத அரச பயங்கரவாத அடக்குமுறைக்கெதிரான போராட்டத்தில் பங்குபற்றியவர். இதன் காரணமாக 1984—1987 வரை பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் பலாலி, ஆனையிறவு இராணுவமுகாம்கள், வெலிக்கடைச் சிறைச்சாலை ஆகியவற்றில் தடுத்து வைக்கப் பட்டிருந்தவர்.

வெலிக்கடைச்சிறையில்பல்வேறு தமிழர் இயக்கங்களைச் சேர்ந்த அரசியல் கைதிகள் ஒன்றிணைந்து நடத்திய உண்ணாவிரத மற்றும் எதிர்ப்பு நடவடிக்கைகளில் பங்கு பற்றியவர். அவசர காலச் சட்டம், பயங்கரவாதத் தடைச் சட்டம் ஆகியவற்றுக்கு எதிராகவும் அரசியல் கைதிகளின் உரிமைகளுக்காகவும், கைதிகளின் நலன் தொடர்பாகவும் போராட்டங்களை சிறையில் முன்னெடுத்தவர்.

1987 இலங்கை — இந்திய ஒப்பந்தம் கைச்சாத்தானதன் பின்னரே மாறனும் இன்னும் பலரும் விடுதலை செய்யப்பட்டனர். அந்தக் காலகட்டத்தில் பல்வேறு இயக்கங்களும் புலிகளால் தடை செய்யப்பட்டிருந்தன. ஒரு விரத்தி நிலை மாற்று இயக்கங்களின் போராளிகள் மத்தியில் மேலோங்கிக் காணப்பட்டது. பலர் இயக்கங்களை விட்டு ஒதுங்கி சொந்த வாழ்க்கைக்குச் சென்றிருந்தனர். ஆனால் மாறன் தான் சரியென வரிந்து கொண்ட பாதையில் தன் மரணம் வரை செயற்பட்டவர்— இப்படி அச்செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-3)

யாழ் மாவட்ட

## வேலையற்ற பட்டதாரிகள் சங்கம்

புதிய அங்கத்தவர்களை பதிவுசெய்வதற்கான

## அறிவித்தல்

இடம்: Jaffna Technical Institute
ஸ்ரான்லி வீதி
(விக்னா கல்வி நிறுவனத்துக்கு அருகில்)

காலம்: 17 - 10 - 1998, 18 - 10 - 1998
(சனி, ஞாயிறு)

நேரம்: காலை 9-30 முதல் 12-30 வரை
(புதிய நேரம்)

இதுவரை பதிவு செய்யாதவர்கள் தங்களது Statement போட்டோ பிரதி ஒன்றைத் தவறாது கொண்டு வரவும். 18 ஆம் திகதிக்குப் பின்னர் பதிவுகள் மேற்கொள்ளப்படமாட்டாது.

அங்கத்துவக் கட்டணம்: ரூ. 50/-

— தலைவர்

(59953)

## எம் இதய அஞ்சலி

எமது சக மாணவி
க. தனலட்சுமி அவர்களின்
அருமைத் தந்தையார்

**வீ. கறுப்பையா** அவர்கள்

13-10-98 அன்று இறைபதம் எய்தியமையையிட்டு கவலையுற்றிருக்கும் எமது நண்பிக்கும், அவரது குடும்பத்தினருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

3 ஆம் வருட கலைப்பீட மாணவர்கள்
யாழ். பல்கலைக்கழகம்.

(சி/5204)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முல்லைத்தீவு ஆஸ்பத்திரியில் டாக்டர்கள் சட்டப்படி வேலை

## மண்ணெண்ணெய் விநியோகம் நிறுத்தம்

வவுனியா, ஒக். 15

புதுக்குடியிருப்பு நகரில் இயங்கி வரும் முல்லைத்தீவு மாவட்ட ஆதார வைத்திய சாலை வெளிநோயாளர் பிரிவில் வைத்தியர்கள் சட்டப்படி வேலை செய்யும் இயக்கத்தை ஆரம்பித்திருப்பதால் நாளொன்றுக்கு 250 நோயாளிகளே சிகிச்சை பெற்று வருவதாகவும் நூற்றுக்கணக்கான நோயாளிகள் சிகிச்சை பெற வழியின்றி திரும்பிச் செல்கின்றனர் என்றும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இடம்பெயர்ந்த மக்கள் பெருமளவில் தஞ்சமடைந்துள்ள புதுக்குடியிருப்பு நகரம் மற்றும் அதனைச் சூழ்ந்த பகுதிகளில் இருந்து நாளொன்றுக்கு 700 தொடக்கம் 1000 வரையிலான நோயாளிகள் இந்த வைத்தியசாலையின் வெளி நோயாளர் பிரிவுக்குச் சிகிச்சை பெற வருகிறார்கள்.

வைத்தியர்களின் போக்குவரத்துத் தேவைக்கென மட்டுப்படுத்தப்பட்ட அளவில் வழங்கப்பட்டு வந்த மண்ணெண்ணெய் நிறுத்தப்பட்டுள்ளதனாலேயே வைத்தியர்கள் தமது எதிர்ப்பைத் தெரிவிக்கும் வகையில் இந்த சட்டப்படி வேலை நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளார்கள் என தெரிவிக்கப்படுகின்றது.

நீண்ட காலமாகவே இராணுவ கட்டுப்பாடற்ற பகுதி மீது எரிபொருள் தடையை அரசாங்கம் அமுல் செய்து வருவதால் அங்குள்ள சகல வாகனங்களும் மண்ணெண்ணெயையே எரிபொருளாகப் பாவிக்கின்றது.

இந்த நிலையில் கடந்த ஜூலை மாதம் முதல் முல்லைத்தீவு, கிளிநொச்சி ஆகிய மாவட்டங்களுக்கும், இராணுவ கட்டுப்பாட்டில் இல்லாத வவுனியா, மன்னார் மாவட்டப் பிரதேசங்களுக்கும் வழங்கப்பட்டு வந்த மண்ணெண்ணெயின் அளவை பாதுகாப்பு அமைச்சு பாரிய அளவில் குறைந்துள்ளது.

அத்துடன் இராணுவ கட்டுப்பாட்டுப் பகுதிகளான வவுனியா, மன்னார் நகரப் பகுதிகளில் ஏற்படுத்தப்பட்டுள்ள மட்டுப்படுத்தப்பட்ட எரிபொருள் விநியோகம் காரணமாக இராணுவ கட்டுப்பாடற்ற பகுதிகளில் இருந்து வந்த சொற்ப கலன்களில் சிறு வியாபாரிகளும், பொதுமக்களும் மண்ணெண்ணெய் கொண்டுசெல்வதும் இப்போது தடை செய்யப்பட்டுள்ளது.

(இ-10)

## நல்லூர் லயன்ஸ் வெள்ளைப் பிரம்பு தினம்

கொழும்பு, ஒக். 15

நல்லூர் லயன்ஸ் கழகம் ''சர்வதேச வெள்ளைப் பிரம்பு தினத்தையொட்டி இன்று காலை 8.30 மணிக்கு யாழ், கந்தர்மடம் சைவப் பிரகாச வித்தியாசாலையில் வெள்ளைப் பிரம்பின் வரலாறு பற்றிய சிறப்பு நிகழ்ச்சி ஒன்றை ஏற்பாடு செய்துள்ளது.

இந்த நிகழ்வில் கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலய ஆசிரியர் ரவீந்திரன் சிறப்புரையாற்றுவார்.

(இ-6)


எமது புதிய CD வெளியீடுகள்!

அருண்பாண்டியன், ரஞ்சிதா நடித்த நாகதேவி

★ ஆட்டோக்காரன் (பிரமிட் CD)

★ உயிரே

அடுத்த வெளியீடு!

★ காதல்

★ ஸ்மைல் பிளீஸ்

வீடியோ விமல் யாழ்ப்பாணம்.

(சி/5203)


## வேம்படி மகளிர் கல்லூரி கல்விக் கண்காட்சி

வேம்படி மகளிர் கல்லூரியில் நேற்று ஆரம்பமான கல்விக் கண்காட்சி இன்றும் நாளையும் நடைபெறவிருக்கின்றது.

யாழ். கல்வி வலயம் ஒன்றின் பணிப்பாளர் கலாநிதி நா. தணிகாசலம்பிள்ளை நேற்று கண்காட்சி ஆரம்ப வைபவத்தில் முதன்மை விருந்தினராகக் கலந்து கொண்டார்.

பயன்தரும் பலவிடயங்களைக் கொண்ட இக்கண்காட்சியை வலயப் பாடசாலை மாணவர்களும்— நண்பகல் 12 மணி முதல் 4மணிவரை வெளி ஆள்களும் — பார்வையிட வசதி செய்யப்பட்டுள்ளது.

(இ-3)

## புளொட் உறுப்பினர் சரண்

கடந்த மாதம் சாவகச்சேரியில் இடம்பெற்ற மோதலின் பின்னர் காணாமல் போனதாகக் கருதப்பட்ட புளொட் உறுப்பினர் ஒருவர் கடந்த செவ்வாய்க்கிழமை சாவகச்சேரி பொலீஸ் நிலையத்தில் சரணடைந்தார்.

சாவகச்சேரி பொலீஸாரால் அவர் யாழ். நீதிவான் முன்னிலையில் ஆஜர் செய்யப்பட்டபோது 14 நாள்கள் அவரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார்.

வவுனியா, இறம்பைக்குளத்தைச் சேர்ந்த றெஜி றிசாங்கன் (உதயகுமார் — வயது 20) என்பவரே சரணடைந்தவராவார்.

(இ-117)


NIRU TUITION CENTRE

KONDAVIL.

A/L 99 DAY

APPLIED & PURE

ஆரம்பம்:- 15-10-98 வியாழன் 10.30 மணி

ஆசிரியர்:- A. பத்மநாதன்

(59903)


## கையெழுத்துச் சஞ்சிகைப் போட்டி

சுன்னாகம், ஒக். 15

வடக்கு - கிழக்கு மாகாண கல்வித் திணைக்களம் கையெழுத்துச் சஞ்சிகைப் போட்டியை இந்த ஆண்டும் நடத்தவுள்ளது.

பாடசாலை மாணவர்களிடையே கலை இலக்கிய ஆர்வம், ஆக்கத்திறன், ஆற்றல், கூட்டு முயற்சி, குழுமுறைக் கற்றல், தொடர்பாடல் ஆகியவற்றை அபிவிருத்தி செய்யும் நோக்குடன் இப்போட்டி நடத்தப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இப்போட்டி ஆறு பிரிவுகளாக நடத்தப்படுமெனவும், ஒவ்வொரு பிரிவிலும் இருந்து தெரிவு செய்யப்படும் மிகச் சிறந்த மூன்று சஞ்சிகைகள் கோட்ட, மாவட்ட மற்றும் மாகாண மட்டங்களில் மதிப்பீடு செய்யப்பட்டு பரிசுகள் வழங்கப்படும் எனவும் மேலும் தெரிவிக்கப்படுகிறது.

ஆக்கங்கள் யாவும் சுயமானதாகவும், புதியனவாகவும் இருத்தல் வேண்டுமெனவும், பாடசாலை மட்டத்தில் அடுத்த மாதம் 4 ஆம் திகதிக்கு முன்னரும், கோட்ட மட்டத்தில் அடுத்த மாதம் 27 ஆம் திகதிக்கு முன்னரும் போட்டிகள் நடத்தி முடிக்கப்பட வேண்டுமெனவும் மாகாண கல்விப் பணிப்பாளர் அறிவுறுத்தியுள்ளார்.

(இ-27)

## மரண அறிவித்தல்

### திருமதி அன்னலட்சுமி ராசலிங்கம்

கொக்குவில் ''சேர்ச்லேன்'' குளப்பிட்டியைப் பிறப்பிடமாகவும் ''மில் லேன்'' பிரம்படி கொக்குவில் கிழக்கை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி அன்னலட்சுமி ராசலிங்கம் 14 – 10 – 98 அன்று காலமானார்.

இவர் காலஞ்சென்ற தம்பிமுத்து — முத்தாச்சி தம்பதிகளின் அன்பு மகளும் காலஞ்சென்ற ராசலிங்கத்தின் (முன்னாள் உரிமையாளர், நந்தினி ஸ்ரோர்ஸ், யாழ்ப்பாணம்) அன்பு மனைவியும், சிறிக்குமார் [நோர்வே], ரஞ்சிதாதேவி [லண்டன்], ரவீந்திரகுமார் [நோர்வே], நந்தினிதேவி (சுவிஸ்), மஞ்சுளாதேவி [ஆசிரியை, கொக்குவில் இந்து ஆரம்பப் பாடசாலை], நடராஜகுமார் (வர்த்தகத் திணைக்களம்), உதயகுமார் நோர்வே ஆகியோரின் அன்புத் தாயாரும், கமலேஸ்வரி (நோர்வே), பஞ்சதாஸன் (லண்டன்), தெய்வநிதி (நோர்வே), ரவீநதிரன் (சுவிஸ்), மகேந்திரன் (இலங்கை வங்கி, மானிப்பாய்), மேகலா ஆகியோரின் அன்பு மாமியாரும், காலஞ்சென்ற பூமணி, நடராசா, சேனாதிராசா, அன்னபூரணம் [மாம்பழம்] ஆகியோரின் அன்புச் சகோதரியும, பஞ்சரட்ணத்தின் [முகாரி, லங்கா சிமெந்து], சிறிய தாயாரும், லக்ஸன், கபிலன், நிலோஜன், இந்துஜன், நிவிஷாத், அனோஷாத், சோபிகாந், கேமகாந் ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (15-10-98) வியாழக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக கொக்குவில் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

தகவல்:

நடராஜகுமார் [மகன்]

மில் லேன்,
பிரம்படி,
கொக்குவில்.

[சி/5206]

## செம்மணி...

(முதலாம் பக்கத் தொடர்)

புதை குழி விவகாரம் மனித உரிமை மீறல்கள் குறித்து அவர்கள் விரிவாக ஆராய்ந்தனர்.

மனிதஉரிமைகள் ஆணைக்குழுவின் அலுவலகத்தில் நடந்த இந்தக் கலந்துரையாடலில் ஆணைக்குழுவின் அதிகாரிகளான எஸ். கிறீதரன், லால் வீரசிங்க, ஜே. என்.போமன், எஸ். ஜிவேஸ்வரா ஆகியோர் பங்கு பற்றினர்.

செஞ்சிலுவை சர்வதேசக் குழுவின் யாழ். வதிவிடப் பிரதிநிதி பிரேபேர்ரண்ட்டும் இந்த சந்திப்பில் கலந்து கொண்டார்.

குடாநாட்டில் கைதுகள், சித்திரவதைகள், துன்புறுத்தல்கள் ஆகியன தொடர்வதை தடுக்க மனித உரிமைகள் ஆணைக்குழு நடவடிக்கை எடுக்கலாமே என்று பிரிட்டிஷ் அதிகாரிகள் கேட்டதற்கு, ''இப்படியான சம்பவங்களை எம்மால் குறைக்க முடியும் [illegible] நிறுத்த முடியாது. இந்தச் சம்பவங்கள் தொடர்பாக எமக்கு முறைப்பாடு கிடைத்ததும் உடன் சம்பந்தப்பட்டவர்களுடன் தொடர்பு கொண்டு நடவடிக்கை எடுக்கிறோம்'' என்று மனித உரிமைகள் ஆணைக்குழு அதிகாரிகள் பதில் அளித்தனர்.

செம்மணிப் பகுதியில் மனித புதைகுழி இருப்பதாகத் தெரிவிக்கப்படுகின்றது. அந்தப் புதைகுழியை தோண்ட தங்கள் அமைப்பு தாமதம் காட்டுவதற்கு காரணம் என்ன? என்று பிரிட்டிஷ் குழுவினர் கேள்வி எழுப்பினர்.

''நாம் இது விடயத்தில் பலதரப்பட்ட நடவடிக்கைகளை எடுத்துள்ளோம் எமது கொழும்பு அலுவலகம் இவ் விடயத்தில் கரிசனையாகச் செயற்படுகின்றது. ஆனால் அரசாங்கத்தின் ஆதரவு பெரியளவில் இல்லை'' என்று பதில் அளித்தனர் ஆணைக்குழு அதிகாரிகள்.

அதேவேளை — யாழ். நகரில் மூடப்பட்ட வீதிகளில் சில நேற்று போக்குவரத்துக்குத் திறக்கப்பட்டிருந்தது. சோதனை நிலையங்களிலும் சோதனைகள் குறைவாக இருந்தன.

(இ-3-5)

## பரீட்சை முடிவு இன்று இங்கு வந்துசேரலாம்

யாழ்ப்பாணம், ஒக். 15

கடந்த சனிக்கிழமை கொழும்பில் வெளியான 5 ஆம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சை முடிவுகளில் யாழ். மாவட்ட முடிவுகள் இன்று இங்கு வந்து சேரும் என நேற்றிரவு தகவல் கிடைத்துள்ளது.

கொழும்பில் தங்கியுள்ள யாழ். மாவட்ட பிரதேச செயலர்களில் இன்று வரவிருக்கும் பிரதேச செயலர்கள் இந்த முடிவுகளை எடுத்து வருவர் எனவும் தெரிவிக்கப்பட்டது.

(இ-3)

## சுற்றிவளைப்பு

திருநெல்வேலி, ஒக். 15

ஏழாலை, குப்பிளான், மயிலங்காடு ஆகிய பகுதிகள் நேற்று சுற்றி வளைக்கப்பட்டுப் பலத்த தேடுதல் மேற்கொள்ளப்பட்டது.

அதிகாலை தொடக்கம் பிற்பகல் மூன்று மணி வரை இந்தச் சுற்றிவளைப்பும் தேடுதலும் இடம்பெற்றன.

(இ-135)

## பயண வசதி..

(முதலாம் பக்கத் தொடர்)

என். டி. பி. கற்கை நெறியைத் தொடரும் 15 பேரும் —

மொரட்டுவ பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த 2 பேரும் —

பேராதனைப் பல்கலைக்கழக பல் வைத்தியத்துறையைச் சேர்ந்த ஒருவரும் —

கிழக்கிலங்கைப் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த மூவரும் — போக்குவரத்து வசதியின்றி தங்கியுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

(இ-3)

## கல்வி...

(முதலாம் பக்கத் தொடர்)

மாறு:-

★ வி. ராதாகிருஷ்ணன் (ஆனைக்கோட்டை)

★ எஸ். கிருஷ்ணகுமார் (உடுவில் மகளிர் கல்லூரி)

★ வை. ரவீந்திரன் (வல்வெட்டித்துறை)

★ எஸ். புஸ்பலிங்கம் (வல்வெட்டித்துறை)

★ ஆர். ரகுபதி (நல்லூர்)

★ ரி. அருணானந்தன் (யாழ். இந்துக் கல்லூரி)

★ எம். ராதாகிருஷ்ணன் (கோப்பாய் தெற்கு)

★ ஏ.சிறி. மனுவல்பிள்ளை (திருக்குடும்ப கன்னியர் மடம் யாழ்ப்பாணம்)

★ ஜி.எவ். லூயிஸ் (யாழ்ப்பாணம்)

★ எஸ். மகேஸ்வரன் (புத்தூர்)

★ ஜி. தேவேந்திரராஜா (நீர்வேலி தெற்கு)

★ எஸ். அருண்குமார் (வல்வெட்டித்துறை)

★ கே. மகேந்திரராஜா (இணுவில் கிழக்கு)

★ சிறி. எம். பி. செபஸ்தியாம்பிள்ளை (யாழ்ப்பாணம்)

★ ஏ. மீரா (அரியாலை மேற்கு)

★ ஏ. ஸ்ரனிஸ்லாஸ் (ஆனைக்கோட்டை)

★ எஸ். நாகராசா (ஏழாலை மேற்கு)

★ எஸ். சுந்தரசிவம் (பண்டத்தரிப்பு)

★ ரி. மேகநாதன் (கொக்குவில் கிழக்கு)

★ எஸ். நந்தகுமார் (புலோலி கிழக்கு)

★ எஸ். அமிர்தலிங்கம் (கொக்குவில் மேற்கு)

★ கே. வரதராஜமூர்த்தி (மட்டுவில் தெற்கு)

★ எம். ஸ்ரீபதி (பருத்தித்துறை)

★ திருமதி எஸ். செலின் சுகந்தி (மாதகல்)

இவர்களுக்கான நேர்முகப் பரீட்சைகள் எதிர்வரும் 31 ஆம் திகதி கொழும்பில் நடைபெறவிருக்கின்றன.

(இ-3)

இப் பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறை வேற்) லிமிடெட் நிறுவனத்தினால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 15-10-1998 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org